கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

வெற்றிக்கென் வேண்டுவதே?

MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL
RECEIVED
10 FEB 1972
THE TANJORE · TANJORE

நெஞ்சில் தமிழ் நினைவு;
நீங்காத மெய்யுணர்வு;
செஞ்சொல் குமிழியிடும்
சிதையாத பாட்டுயிர்ப்பு;
துஞ்சா இருவிழிகள்;
தொய்ந்து விழா நற்றேள்கள்;
அஞ்சுதல் இன்றி —
அயர்வின்றி நின்றவுரம்;
எஞ்சுகின்ற காலமெலாம்
ஏற்ற நறுந்தொண்டு;
நஞ்சுமனங் கொண்டார்
நடுக்கமுறுஞ் செந்துணிவு;
கொஞ்சமிலை, நல்லிளைஞர்
கூட்டமோ கோடிபெறும்!
விஞ்சுகின்ற செந்தமிழே,
வெற்றிக்கென் வேண்டுவதே?



நமக்கு வந்த மடல்கள்.

0: 291: பார்ப்பானையே குறை கூறிப் பயனில்லை!, எனும் ஆசிரிய வுரை உண்மையான தன்னாய்வாக முகிழ்த்துள்ளது. ஆயினும், தங்கள்பால் மிக்குள்ளதென்று பிறர் நினைக்கும் தன்முனைப்பு நீக்கத் திற்குச்சரியானவழி 'குழுவினர் எடுக்கும்' முடிவுக்குக் கட்டுப்படுவதே. அக்குழுவினர் தென்மொழியை ஆய்வு செய்யவேண்டும். ஆசிரியர், இதழ் வெளிவரும் வரை பொறுப்பாளி; வெளி வந்த பிறகு ஆசிரியக் குழுவின் ஆய்வுக்கு இதழ் உட்படுத்தப்பெறல் வேண்டும். ஆசிரியக்குழு அமைத்தலும், அதனை நெறிப்படுத்தும் கொள்கைக் கோட்பாடும் பிறவும் அணியமாக்குதலும் தங்களாலேயே முதலில் திட்டமிடப் பெறலாம். அத்திட்டமிடுதலில் தங்களிடம் விரிந்த பொதுமை உணர்விருக்கும்—வளர்ச்சிக்கு வழிவிடும் தன்மையிருக்கும் என்று நம்புகின்றேன்.

எவ்வளவு மீமிசைப் பண்பும் அறிவும் கொண்டவராக விளங்கினாலும், ஒருவர் தம் அறிவும் பண்பும் சரியானமுறையில் பொதுமக்களைச் சேர்வதற்கு முன்னோட்டமாகத் தம்கொள்கை வளர்க்கும் குழுவிடம் அவற்றைத் தன்னாய்வு செய்ய வேண்டும் என்றே கூறுவேன். தீவிரமான கருத்துகளைச் செரிக்கும் அளவு தமிழ்க் குமுகாயம் இல்லை. அதன் வயிற்றில், கண்ட குழப்ப நோய்கள் குடிகொண்டுள்ளன. 'தமிழா, உன் வயிற்றைப் பெரிதென்று கருதாதே, உன் தமிழைப் பெரிதென்று கருது' என்றால் எவன் கேட்பான்? தமிழன் தமிழை உயிராக நினைப்பவன். உண்மை. ஆனால் அவனை எண்ணிச் செயல்பட விடாது தடுக்கும் குமுகாயப் பொருணிலை அழுத்தங்களை நோக்க வேண்டாவா? தமிழ் ஒரு கூட்டத்தாரின் வணிகப் பொருளாகி நிற்பதை நோக்க 'நம் போராட்ட நடுக் களம் தமிழ் அன்று' என்று புலப்படவில்லையா?

—பறம்பை அறிவன், பறம்புக்குடி.

0: 292: தமிழனின் நெஞ்சில் நிலை நிற்கும் மூட நம்பிக்கை சாதிப்பித்து, சமயப்பித்து யாவும் ஒழிய வேண்டும். தாங்கள் என்னதான் பழமை பாடினாலும் இறையைப் புகழ்ந்தாலும், அவற்றையெல்லாம் இவன் தனது மூட நம்பிக்கைக்கும், முட்டாள்தனத்துக்கும் உரம் ஆக்கிக் கொள்வானேயன்றி ஊக்கம் கொண்டு ஆக்கத்தில் ஈடுபடுவானா என்பது ஐயமே. எப்படியோ தமிழன் தலைநிமிர வேண்டும் என்று எண்ணுகின்ற என் போன்றோர் தங்கள் முயற்சியைப் போற்ற இயலாது குறித்து வருத்தமே! பெரியார் மருந்தே சிறந்தது என்று எண்ணத் தோன்றுகிறது.

—அ. தாசு, கீரமங்கலம். (தஞ்சை)

0: 293: தென்மொழித் தொடர்பேற்படக் காரணியமாய் இருந்தவை இரண்டுதான். ஒன்று தனித் தமிழ். பிறிதொன்று தமிழக விடுதலை. இன்று தென்மொழியில் தமிழக விடுதலைக்கான கரணியங்கள் காட்டப் பெறுவதில்லை. மாறாக ஓரிறைப் போராற்றலுக்கு முட்டுக் கொடுக்கப்படுகின்றது. மேலும், அதே மாபெரும் தொண்

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம் பார்க்க]

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 9: ஓலை: 9-10.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

சிலை-சுறவம் தி. பி. ௨00௨-௩ - (சனவரி-பிப்- 1972.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழியின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

யாருமில்லை; நாங்கள் தாம்!

அண்மையில், தமிழகப் பிரிவினை பற்றித் தமிழ் நாட்டின் உள்முகக் கிளர்ச்சி ஒன்று சூடு பிடித்துக்கொண்டு வருகின்றது. தமிழ் நாட்டின்முதலமைச்சர் மாநிலத்தன்னாட்சி முறையை ஆங்காங்கே வலியுறுத்தி வருகின்றார். அவர் கொள்கைக்குச் சில கட்சிகளின் தலைவர்கள் வலிவான எதிர்ப்புக் காட்டி வருகின்றார்கள். அந்த எதிர்ப்புகளைத் தற்காலிகமாகச் சரிகட்ட வேண்டியோ, வேறு கரணியம் பற்றியோ தமிழக முதல்வர், தாம் கேட்கும் மாநிலத் தன்னாட்சிக்குப் பலவகையான கொள்கை விளக்கங்களைக் கூறி வருகின்றார். அத்துடன் தாம் நாட்டு ஒற்றுமைக்குத்தான் முதலிடம் கொடுக்க விரும்புவதாகவும், மாநிலத் தன்னாட்சிக்கு அடுத்த இடந்தான் என்றும் எடுத்துக்

கூறித் தாம் கேட்கும் மாநிலத் தன்னாட்சி என்பது தமிழகம் இந்திய ஆட்சியினின்று தனியாகப் பிரிய வேண்டும் என்னும் கருத்தில் கூறப் படுவதன்று; மாநிலங்களுக்குத் தன்னிறைவான அதிகாரங்கள் வழங்கப் பெற்று, அவை நாட்டு முன்னேற்றத்திற்கெனத் தன்விருப்ப மாகச் செயற்பட வேண்டும் என்னும் வகையில் கூறப்படுவதாகும் என்று தெளிவாக விளக்கியுள்ளார். அதுவுமன்றிப் பிரிவினைக் கோட்பாட்டைத் தம் கட்சி எப்பொழுதோ கைவிட்டுவிட்டது என்றும் எனவே நாட்டில் வேறு சிலரால் எழுப்பப்பெறும் அத்தகைய கொள்கை முழக்கங்களுக்குத் தம்கட்சி பொறுப்பாகாதென்றும் திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளார். இக்கொள்கைக் குழப்பங்களைக் கண்ட எதிர்க்கட்சிகள் சிலவும், இந்திய ஒற்றுமை என்னவோ தம்மால்தான் கட்டுண்டு கிடப்பதாக எண்ணிப் பெருமிதப்பட்டுக் கொள்ளும் ஒருசில செய்தித்தாள்களும், முதலமைச்சரின் தன்னாட்சிக் கொள்கையைப் பகடி செய்வதுடன், நீறுபூத்தநெருப்பாய்க் கனன்று கொண்டிருக்கும் தமிழக விடுதலையுணர்வையே இழித்தும் பழித்தும் பேசி வரத் தலைப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் மொழியடிப்படையில் **தனித்தமிழ்க்கொள்கையையும்** அரசியல் அடிப்படையில் **தனித்தமிழ் நாட்டுக் கொள்கையையுமே** தன் தலையாய கொள்கைகளாகக் கொண்டுள்ள **தென்மொழி**, மக்களின் கொள்கைக் குழப்ப இடிபாடுக ளுக்கிடையில் சிக்கிய ஓர் உயர்ந்த மாந்த உரிமைக் கோட்பாட்டை விளக்கத் தன்னை அணியப்படுத்திக்கொண்டு முன்வர வேண்டியுள்ளது.

தமிழகத்தின் பிரிவினைஎண்ணம் இன்று நேற்று ஏற்பட்டதன்று. ஏறத்தாழ, கடந்த ஐம்பது ஆண்டுக் காலமாகவே, தமிழ் நலமும், தமி ழர் நலமும் கருதி வருகின்ற தமிழகத் தலைவர்களிடையில், அரசியல் முறைப்படி தமிழகத்தை வடஇந்திய ஆட்சித் தொடர்புகளின்று துண் டித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்டு. அரசியல் கருத்துப்படியும், பொருளியல் அடிப்படையிலும், குமுகாய அமைப்புப் படியும் அதற்குப் பெருத்த-வலிவான கரணியங்கள் பல இருந்தன; இன்னும் இருந்து வருகின்றன. ஆனால் நாடு அப்போது வெள்ளைக் காரனின் கையில் இருந்ததாலும், ஒட்டு மொத்தமாக இந்தியாவுக்கே விடுதலை வேண்டும் என்ற வேட்கை நாடு முழுவதும் பரந்துபட்டிருந்த தாலும், தென்னிந்தியா வடவர் தொடர்பினின்று தனியே பிரிக்கப் பட வேண்டுமென்ற கோரிக்கை வலியுறுத்தப்பெறாமல் வெறும் கருத் தளவிலே மட்டும் ஒப்புக் கொள்ளப் பெற்ற கொள்கையாக இருந்து வந்தது. அக்கொள்கைக்கு அரணாக நின்ற தூண்கள் தமிழகத்தும் ஆந்திரத்தும், கேரளத்தும், கன்னடத்தும் தம் கால்களை ஊன்றிக்

கொண்டு நின்றன. அவை அனைத்தும் தங்கள் ஒட்டுமொத்த கொள்கைக்கு இட்டுக்கொண்ட பெயர் திராவிடநாட்டுப்பிரிவினை என்பதே ஆகும். ஆனால் காலச் சிதைவினாலும், காந்தியின் சூழ்ச்சியினாலும் வெள்ளைக்காரன் வடவர்களிடத்தும், முசுலிம்களிடத்தும் இந்தியா-வையும் பாக்கித்தானையும் ஒப்படைத்து விட்டுப் போக வேண்டியானது. இதன் பின்னும் இக்கொள்கை மேலும் வலுப்பெற்றுத் தீப்பற்றி எரியலானது. தென்னாட்டு மக்களிடையே குறிப்பாகத் தமிழரிடையே இவ்வெண்ணம் பெரியார் ஈ. வே. இரா. அவர்களாலும் அறிஞர் அண்ணா அவர்களாலும் நெய்யூட்டி வளர்க்கப் பெற்றது. பாவேந்தரால் நாட்டுப் பண்ணும் முழங்கப்பெற்றது.ஆனால் இடையில் ஏற்பட்ட கருத்துச் சிதைவாலும், கட்சிக் குலைப்பாலும், திராவிட நாட்டுப் போர் முழக்கம் சிறிது சிறிதாகத் தேய்ந்து போனது. திராவிட நாட்டுப் பிரிவினைத் தீ கொழுந்துவிட்டு எரிந்த அந்த நிலையில் அறிஞர் அண்ணா முன்னறிவுடன் ஒரு தவற்றைச்செய்யாமலிருந்திருப்பாரானால், இந்நேரம் தமிழர்கள் தனித்தமிழ்க் கொடிபறக்கும் தன்னுரிமைத் தமிழ் நிலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பர்; தம் நிலையிலும் பெருத்த முன்னேற்றத்தைக் கண்டிருப்பர்.

ஆனால் தமிழர் இனத்தின் மறுமலர்ச்சி வரலாற்றில் ஏனோதெரியவில்லை, இப்படியொரு சறுக்கல் ஏற்பட்டு விட்டது. அன்று ஏற்பட்ட சறுக்கலுக்குப் பின், கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி அதுவும் தேய்ந்து சிற்றெறும்பாகியதைப் போல், திராவிட நாட்டு விடுதலை முழக்கம், தமிழ்நாட்டு விடுதலை முழக்கமாகத் தேய்ந்து, இக்கால் மாநிலத் தன்னாட்சிக் கொள்கையில் வந்து நின்று கொண்டுள்ளது. இனி இந்தச் சிற்றெறும்பும் கூட மேலும் தேய்ந்து ஒரேயடியாக இல்லாமல் போய் விடுமோ என்று எண்ணும் அளவிற்கு, அக் கொள்கைக்குப் பல விளக்கவுரை, விருத்தியுரைகள் சொல்லப் பெற்று, இறுதியில், "நாங்கள் கேட்பது நாட்டுப் பிரிவினை அன்று; அதிகாரப் பிரிவினையே யாகும்" என்று கருத்துரை கூறப் பெறுகின்றது. இனி, இன்னுஞ் சில ஆண்டுகள் போகுமானால் இக் கொள்கையும் போய், 'நாங்கள் கேட்பது அதிகாரப் பிரிவினை கூட அன்று; வருமானப் பிரிவினைதான் என்று' முடிவுரை கூறும்படி ஆனாலும் ஆகலாம். அதனால்-தான் ஏனோ எதற்காகவோ தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தம் தோளில் சுமக்கப் படாதென்று கூறுகின்ற தன்னாட்சிக் கொள்கையை, அஃதாவது பச்சையாகச் சொன்னால் பிரிவினைக் கொள்கையை [பிரிவினைத்தடைச் சட்டம் நடைமுறையில் உள்ள தென்பது எனக்குத் தெரியும்] தாம்

அடிக்கடி போய் வருகின்ற வெளிநாட்டில் எங்காகிலும், அல்லது பறந்து வரும் வழியில் உள்ள கடல்நீரில் எங்காவது தூக்கியெறிந்து விடாமல், எங்கள் தோள்களின் மேல் இறக்கி வைத்துவிட்டு, அச்சமின்றி எங்கும் எவரிடத்தும் எதற்காகவும் சொற்கோட்டமும் உடற் கோட்டமுமின்றிப் போய் வரலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இந்நிலையில் உயர்திரு கலைஞர் அவர்களை நான் ஏதோ பகடி பண்ணுவதாக எண்ணிக்கொள்ளக் கூடாது. உண்மையிலேயே சொல்கின்றேன். அவருக்கிருக்கும் பொறுப்பு பெரிது; மேலும் இதுவரை ஆற்றிய பணியும் (!) மிக மிகப் பெரிது. அவருக்கு மேலும் பல திறமைகள் இருக்கலாம்! ஆனால் அவற்றையெல்லாம் செயற்படுத்த நேரமிருக்குமோ இருக்காதோ, எதற்கும் இந்தப் பொறுப்பை அவர் எங்களிடம் ஒப்புவித்துவிட நேரடியாகவே வேண்டிக் கொள்கிறேன். **“வேறு எவரெவரோ எழுப்புகின்ற பிரிவினைக் கூப்பாடுகளுக் கெல்லாம் எதிர்க்கட்சிகாரர்களும் மக்களும் எங்கள் மேல் பழி சுமத்துகின்றார்கள்; நாங்கள் பிரிவினைக் கொள்கையை என்றோ விட்டு விட்டோம்; அதில் ஐயப்படவேண்டா”** என்று கலைஞர் அவர்கள் இலைமறை காயாகப் பேசியதைப் பார்த்து என் போன்றவர்கள் மனம் மிகவும் புழுங்கிச் சாகின்றது. இதில் என்ன தயக்கம்—இரக்கம் காட்ட வேண்டி வந்தது?

இந்நாட்டில் பிரிவினைக் கொள்கையை உடும்புப் பிடியாக விடாமல் கூறி வருபவர் தமிழர் தந்தை பெரியார் ஒருவர்தாம். அடுத்தபடி ஆதித்தனார் ஏதோ வருமானத்திற்காகக் கொஞ்ச நாட்கள் கூப்பாடு போட்டுப் பார்த்தார். அதன் பின் கூப்பிட்ட குரல் வந்த பக்கம் போனவர் இது வரை திரும்பவே இல்லை; குரல் கொடுக்கவும் இல்லை. அவருக்கடுத்தபடி தமிழ் நாட்டைப் பிரித்தே ஆக வேண்டும் என்று முரண்டு பிடிப்பவர்கள் நாங்கள்தாம்! அஃதாவது தனித் தமிழ்க் கொள்கைக்காரர்கள்தாம்! பின் வேறுயார் இருக்கிறார்கள்? எங்களை எதற்குப் பெரியவர்களாகக் காட்ட வேண்டும் என்பது கலைஞர் கருத்தோ என்னவோ? **'யாரோ'** என்று சொல்லியிருக்கிறார்! எஃது எப்படியானாலும் இங்குள்ள ஆட்சியாளர்கள் சிலர் சொல்வதைக் கேட்டும், பிரிவினைக்கொள்கையால் இந்தியாவுக்கே ஏதோ பெரிய கேடு வந்து விட்டதைப் போலும், இங்குள்ள தேசியத் [!] தலைவர்கள் சிலர் [அதுவும் திருவாளர் பக்தவத்சல, சுப்பிரமணியன்களை நினைத்தால் எனக்குச் சிரிப்பாக வருகிறது], ஐயோ, பிரிவினையா? 'ஆச்சா, போச்சா' என்று இருப்புச் சட்டியில் ஊற்றிய எண்ணெய் போலவும், எண்ணெயில் இட்ட பலகாரம் போலவும் கொதிக்

கவும், குதிக்கவும் செய்வதைப் பார்த்தால், இந்திரா காந்தி அம்மையார் 'யாரங்கே, பிரிவினை கேட்பது? ஓ! மானெக்சா......ஓடிப் போய் அந்த முண்டத்தைப் போய்க் கட்டியிழுத்து வந்து பிண்ட பிண்டமாக அறுத்துப் பிழிந்து எண்ணெயாக்கி, எனக்குத் தலை முழுக் காட்டுங்கள்' என்று சொல்லி விடுவது போல ஏன் அஞ்சி அஞ்சித் தொலைக்க வேண்டும்? அப்படியே சொல்லி விட்டால்தான் என்ன கெட்டுப் போகிறது? இக் கேடு கெட்ட ஆட்சியில் உள்ளதை விட இந்திரா காந்தி தலைக்கு எண்ணெயாகப் போனாலும் நல்ல பயனில்லையா? அது தான் நாங்களே—அஃதாவது-நானே முந்திரிக் கொட்டைத்தனமாக இதைக் கூறவேண்டி வந்தது.

"ஐயா, பொது மக்களே! (பழைய பாணியில் சொல்வதானால் மகா சனங்களே!) இந்தப் பிரிவினை கிரிவினை என்று கூறுவதெல்லாம் வேறு யாருமில்லை'ங்க; நாங்க'தாம் ஆமாம்; உறுதியாகச் சொல்லி விட்டோம். இதிலே ஒளிவு மறைவுக்கே இடமில்லை'ங்க" [இங்கு ஒரு வேண்டுகோள்: இந்த என் மனச் சான்றுக்கு வேறுபாடில்லாத கருத்தைத் தினமணி சிவராமன்களும், துக்ளக் இராமசாமிகளும், இன்னும் பேராயக் கட்சித் தேசீ......யங்களும் அப்படியே மொழி பெயர்க்காமல் இந்திராகாந்திக்கு அனுப்பிவைப்பார்களாக]

அடுத்தபடியாக இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நான் அஃதாவது நானும் என்னை [இந்த ஒருவகையிலாகிலும்] பின்பற்ற விரும்புகிறவர்களும் [அப்படி யாராவது இருத்தால்; அப்படி இல்லாத விடத்து 'நான் ஒருவனே' என்று பொருள் பண்ணிக் கொள்ளும்படி எதிர்காலத்தில் என்மேல் வழக்குப்போட்டோ போடாமலோ மன்றில் கொண்டுபோய் நிறுத்தி உசாவப் போகும் நடுவருக்குக் கூறிக் கொள்கின்றேன்] விரும்புவது தமிழக விடுதலையே. [இதில் யாரும் விருத்தியுரை விளக்கவுரை எதிர்பார்க்க வேண்டா]. பச்சையான [காய்ந்துபோன அன்று] தமிழகப் பிரிவினையே! அதற்குக் காரணங்கள் இவை:

முதலில், பிரிந்து போகும் உரிமை என்றன் பிறப்புரிமை. குடியரசு அமைப்பில் நானும் ஒரு குடி மகன். நானும் ஓர் ஆட்சியின் உறுப்பு. எனக்கு இந்த இந்திய நாட்டு ஆட்சியினின்று பிரிந்து போக வேண்டும் என்ற எண்ணம் வந்ததற்கே இந்த அரசு தான் குற்றவாளி. என்னைக் கட்டாயப் படுத்தி ஓர் ஆட்சியின் கீழ் [அது குடியரசாட்சியாக விருந்தாலும் சரி; வேறு எந்த ஆட்சியாக விருந்தாலும் சரி] என்னைக் குடிமகனாகச் செய்து கொள்ள, என்னைப் போல் உள்ள எவருக்கும் உரிமை இருக்கக் கூடாது.

இரண்டாவது, இவ்விந்திய ஆட்சி ஒரு சரியான குடியாட்சி அமைப்பில் அமைக்கப் பெற்ற ஆட்சியன்று. இங்குள்ள குடிமக்கள் எல்லாரும் வரலாற்று முறையாகவும் இன முறையாகவும் மொழி வழியாகவும், தாங்கள் அனைவரும் சமம் என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் தங்களை வேறு வேறாகவே, இன்னொருவருக்குத் தங்களை உயர்த்தியோ தாழ்த்தியோ, ஆண்டான் என்றோ அடிமை என்றோதான் இன்னும் கூறிக்கொள்கின்றனர். இவ்வாறு வரலாறு, இனம், சமயம், மொழி முதலியவற்றின் அடிப்படையாக உள்ள ஏற்றத்தாழ்வுகளை அறவே களைந்தெறியாமல், அரசியல் அமைப்பு ஒன்றினால் மட்டும் அனைவரும் சமம் என்பதும்; இது குடியரசு என்பதும், ஒரு பெரிய அரசியல் ஏமாற்று ஆகும். இதை என் மனச்சான்று சரியான ஆட்சியமைப்பாக ஒப்புக் கொள்ள மறுக்கின்றது.

மூன்றாவது, இந்நாட்டு மக்களின் ஒட்டு மொத்தமான மூட நம்பிக்கைகளுக்கு என்னால் கட்டுப்பட முடியாது. நான் இவர்களில் ஒருவன் என்பது என் விருப்பமின்றியே பறைசாற்றப் படுகின்றது. அப்படி என்னையறியாமலேயே நான் இவர்களைப் போலப் பகுத்தறிவற்றவனாகவும், திருந்தாத பண்பற்ற மாந்தனாகவும் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கின்றது. நான் அல்லது என்னைப் போல் உள்ள தனிப்பட்ட ஒருவன் எவ்வளவுதான் அறிவாலும் பண்பாட்டாலும் உயர்ந்திருந்தாலும், என்னையும் சமய, குலப் பிரிவினைகளால் நெருக்குண்டு அறியாமைச்சேற்றில் அழுந்திக்கிடக்கும் இவர்களுடன் ஒப்பவைத்துக் கூறிக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு நான்உட்பட வேண்டியிருக்கிறது. அந்நிலை என் தன்மானத்திற்கும் தன்னறிவுக்கும் என் மெய்யறிவுக் கோட்பாட்டிற்கும் மிக மிகக் கேடாகவும் தாழ்ச்சியாகவும் இருக்கின்றது. எனவே இம்மக்களிலிருந்து நான் பிரிந்து போகவே விரும்புகின்றேன். அல்லது என்னைப் போல் தன்னுரிமை விரும்பும் மக்களுடன் நான் ஒருங்கிணைய விரும்புகின்றேன். இப்படி யிருப்பவர்களின் தொகைக்கேற்ப ஒரு நிலப்பகுதியை இந்நாட்டிற்குள்ளேயே என் போன்றவர்களுடன் எங்கள் வாழ்விடமாக ஒதுக்கிக் கொள்ள விரும்புகின்றேன்.

நான்காவதாக, நான் சார்ந்துள்ள இந்நாட்டுச் சட்டத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. இச்சட்டம் இங்குள்ள என்போன்ற மக்கள் யாவருக்கும் பொதுவாக இயற்றப் பெற்ற சட்டம் என்பதை ஒப்புக் கொள்ள முடியாது. இதை இயற்றிய ஆறு பேர்களில் நான்குபேர் இந்நாட்டின்மிகச்சிறுபான்மையராகவும், இங்குள்ள மிகப்பெரும்பான்மை

மக்களைக் காலங்காலமாய் ஏமாற்றிக் கொண்டும் அடிமைப்படுத்திக் கொண்டும், அவர்களுக்குள் மேலும் மேலும் ஒற்றுமையும் முன்னேற்றமும் ஏற்படாதவாறு மடமைப்படுத்திக்கொண்டும் உள்ள ஆரியப்பார்ப்பன அஃதாவது பிராமண இனத்தின் காவலர்களாவர். அவர்கள் தங்கள் இனத்தைக் காத்துக்கொள்ள வேண்டியும் பிற இனத்தவர்களைத் தங்கட்கு அடிமைப்படுத்திக் கொள்ள வேண்டியும் தங்கள் முன்னோர்களால் எழுதிவைக்கப் பெற்ற வேத, புராண, இதிகாசங்களைப் போலவும், தங்களுக்கு முற்றும் உகந்ததும் இந்நாட்டிலுள்ள என் போன்ற பிறரை முற்றும் வஞ்சிப்பதும் ஆன 'மனு தரும சாத்திரம்' என்ற 'வருணாசிரம தர்மக்'கோட்பாட்டு நூலை அடிப்படையாக வைத்தும் செய்து கொண்ட நூலே இந்நாட்டில் சட்டம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப் படுவதாக நான் ஐயுறுகின்றேன். அந்த ஐயத்தைப் போக்கும் வரையில் என் வாழ்வுரிமையில் தலையிட இந்த அரசுக்கு என்ன உரிமை இருக்கிறது? எனவே நான் நாட்டுப்பிரிவினையை வரவேற்கிறேன்.

ஐந்தாவதாக, என் தாய் மொழியில் எவ்வளவோ சிறப்புகளிருந்தும், அஃது இந்நாட்டின் தேசியமொழிகளுள் ஒன்று என்று ஏற்கப் பெற்றும், இம்மொழியில் கல்வி கற்றவர்கள் இந்நாட்டில் எங்கும் சென்று அரசினர் பணிசெய்ய வாய்ப்பில்லாமல் இருக்கின்றது. இதை விட இன்னும் அவலமான நிலை என்னவென்றால், இம்மொழியில் படித்தவர்கள் இப்பொழுது நான் வாழும் பகுதியும், என் தாய்மொழி வழங்கும் மாநிலமும் ஆகிய தமிழ்நாட்டில்கூட அரசினர் பணியேற்பதற்கான வாய்ப்புகள் இந்நாட்டு அரசியல் சட்ட அமைப்புகளால் உறுதிப் படுத்தப் பெறவில்லை. இதற்கு நேர்மாறாக இந்த நாட்டின் வடமாநில மொழியான இந்திக்கும் வேற்று இன மொழி படித்தவர்களுக்குமே அரசு அலுவல்களிலும் பிற துறைகளிலும் வாய்ப்பு ஏற்பட்டு வருகின்றது. இதை என் போன்றவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. இவ்வகையில், மேலோங்கி நிற்கும் இந்தி வல்லாண்மையை 1937-இலிருந்து போராடியும் இன்னும் அகற்ற முடியவில்லை. இங்குள்ள சட்டமன்ற, பாராளு மன்ற உறுப்பினர்களும் இவ்வகையில் என்ன முயற்சி செய்தும் ஒரு முடிவை ஏற்படுத்த முடியவில்லை. என் நாடு அஃதாவது நான் வாழும் இத் தமிழ்நாடு, இவ்விந்திய நாட்டிலிருந்து முழு விடுதலை பெற்றாலொழிய இச்சிக்கலுக்கெல்லாம் வழி பிறக்காதாகையால், நான் தமிழகப் பிரிவினையை முழுமூச்சோடு வற்புறுத்துகின்றேன்.

ஆறுவதாக, இவ்விந்தியக் குடியரசாட்சி மத, இன வேறுபா டற்ற ஆட்சியாகும் என்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. பெரிய பெரிய ஆலைகள் திறக்கப்படும் பொழுதும், புதிய புதிய கப்பல்கள், வானூர்திகள், புகைவண்டிகள் முதலியவை செயலாற்ற விடுவதற்கு முன்னும், அவற்றிற்கு அரசுச்சார்பில் பூசை, வழிபாடுகள் முதலிய மூடத்தனமான செயல்களைக் கைக்கொள்ளுவதிலும், தேவை யற்ற சாதி. சமய, புராண, இன ஆரவாரப் பண்டிகைகளைத் தேசியத் திருவிழாக்கள் என்றாக்கி அவற்றிற்கு விடுமுறைகள் விடுவதன் வழி ஏராளமான பொருட்செலவுகளையும், பொழுதுச் செலவுகளையும் வரு வித்து, இந்தநாட்டு மக்களை மேலும்மேலும் ஏழைகளாகவும் அடிமைக ளாகவும் மூடர்களாகவுமே வைத்திருக்க விரும்புகின்ற-அல்லது வைத் திருப்பதைத் தவிர வேறு வகையற்ற ஆட்சியை எப்படி மதவேறுபா டற்ற குடியாட்சி என்று ஒப்புக்கொள்ள முடியும்? எனவே இத்தகைய பழைய அடிமைப் பழக்க வழக்க ஆட்சியினின்று என்னையும் நான் பிறந்த மொழிவழங்கும் இந்நாட்டையும் வேறு பிரித்து, அரசியல், பொருளியல், ஆகியவற்றில் சமத்துவம் வாய்ந்ததும், குமுகாயவிய லில் சாதி, சமய, வேறுபாடற்ற பொதுமை நிறைந்ததும், மொழி யுரிமை பெற்றதும் பண்பாட்டில் தலைசிறந்ததுமான ஓர் ஆட்சியை நிறுவிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஏழாவதாக, ஒரு பெரிய நிலமாக இருப்பதாலும், இந்தியா விடுதலை பெற்று இருபத்தைந்து ஆண்டுகளாக, பெரும்பாலும் வடவர் களே ஆட்சியின் தலைமைப் பொறுப்பைக் கைக்கொண்டு வருவதா லும், ஆட்சி வரலாற்றில் சிறந்ததும், மூத்த நாகரிகம் உடையதும், முதன்மையான மொழிச்சிறப்புடையதும் ஆகிய என் தமிழினத்தி லிருந்து ஒருவருக்கும் இதுவரை ஆட்சியின் தலைமைப் பதவியை விட்டுக் கொடுக்காமல் ஏமாற்றிவருவதாலும், பொருளியல் நிலையில் இன்னும் என் தாய் மாநிலம் முன்னேறாது இடருற்று வருகின்ற இந்த அவல நிலையை மாற்ற, இவ்விந்திய நாட்டினின்று நாங்கள் விடுதலை பெற்றேயாக வேண்டும் என்ற முழக்கத்தை எப்பொழுதும் வற்புறுத்த அணியமாக உள்ளேன் அல்லது உள்ளோம் என்பதை யாவர்க்கும் வெளிப்படையாக—மிக மிகப் பச்சையாகக்-கூறிக்கொள் கின்றேன். இக் கோரிக்கை வங்காள தேசம் போல் போராடித்தான் நிறைவேற்றப் படவேண்டும் என்பதும், வழக்காடியும் பெற்றுக் கொள்ளலாம் என்பதும் இவ்விந்திய ஆட்சியினரையும், காலத்தை யும், இடத்தையும் பொறுத்ததாகும் என்று கூறி முடிக்கிறேன். அதுவரை என் தோள்கள் அமைந்திருக்குமாக!



தமிழ்க்கெனப் பிறந்து தமிழ்க்கென வளர்ந்து
தமிழ்க்கெனப் பயின்று தமிழ்க்கெனப் பயிற்றித்
தமிழ்க்கென ஓய்ந்து தமிழ்க்கென ஆய்ந்து
தமிழ்க்கென வாழுந் தமிழே வாழி!

—பெருஞ்சித்திரன்

மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரின்
71-ஆவது பிறந்த நாள் நினைவு வெளியீடு-
தென்மொழி, கடலூர்-1.

வங்க வாகை!

['செந்தமிழ்ச் செல்வி' சனவரி '72 இதழில் வெளி வந்தது] —பெருஞ்சித்திரன்.

களக்காட்சி:

நுனிவளைந்த கூருகிர்வாய் நெடுங்கழுத்து
நுண்ணேக்குக் கூர்விழிகள் செஞ்சிறைகள்
பனிபடர்ந்த கருமுகில்கள் ஊடே பாயும்
பருத்ததலைப் பெரும்பருந்துக் கூட்டம் எல்லாம்
கனிமுதிர்ந்த பேரால மரத்தைச் சுற்றும்
கருங்காக்கைக் கூட்டம் போல் பறந்து சுற்றி
நனிதின்று தசைகிழித்து நரம்பைச் சீய்க்கும்
நரக்காடாம் கீழ்வங்கம் காண்மின்! காண்மின்!

எஃகம்பாய்ந் தெடுத்தெறிந்த தசைதுடிப்ப
எலும்புகளை நரிகடிப்ப நாயிழுப்ப
அஃகம்போல் செங்குருதி ஊற்றெடுக்க
அடுக்கடுக்காய்ப் பசும்பிணங்கள் சாய்ந்துவீழ
ஒஃகியவெண் விழிபிதுங்க வாய்திறப்ப
ஒழுகியசெந் நாவெயிற்றில் இடுக்கிக் கொள்ள
வெஃகாமை மனம்பெருக்கி விடுதலைக்கே
வேட்கைதரும் போர்க்களங்கள் காண்மின்! காண்மின்!

கீழ்வங்காளியரின் துணிவைப் புகழ்ந்தது:

வங்காளத் திருநாடே! உணர்வுக் காடே!
வன்னெஞ்சப் பேய்கிழித்த மறவர் மண்ணே!
எங்கோவென் னுடலுக்குள் ஊற்றெடுக்கும்
எம் நிலத்து விடுதலைக்கே உணர்வைச் சாய்க்கும்
மங்காத பெரும் புகழே! வயிரக் குன்றே!
மாநிலத்தின் பெருமூச்சை வரலாருகச்
செங்காட்டின் குருதியைக்கொண் டெழுதிவைத்த
செந்தமிழின் புறப்பாட்டே வாழ்க! வாழ்க!

படைமுகத்துப் பைந்நிறச்சீ ராடை பூணீர்!
பயிற்சியின்றிப் பெருங்களத்தைத் துகைக்க லானீர்!
கடைமுகத்து நெஞ்சினரைக் கிழிக்க லானீர்!
கன்னியரின் உடல் மோந்த நாய்கள் தம்மின்

புடைமுகத்தின் எலும்புகளை நொறுக்க லானீர்!
பூணிகர்த்த தலைவர்க்கொளி ஏற்ற லானீர்!
பெடைமுகத்தைப் பெற்றாரைத் துறந்தீர்! யாண்டும்
பெறற்கரிய பெரும்பேற்றைப் பெறல்கொண் டீரே!

போரில் இறந்துபட்ட படை மறவர்க்கு இரங்கல்!

மைத்தடங்கண் மொய்த்தவழி வெறித்த தையோ!
மார்பகலத் துழுஞ் சிறுவர் கலுழ்வர் ஓ! ஓ!
வெய்த்தடந்தோள் தழுவவரும் உடன்பிறப்பார்
விம்மியழும் பேரவலம் யாண்டும்! யாண்டும்!
வைத்துமிழ்ந்த பெருவயிற்றின் தாயர்தம்மின்
வார்த்தெழுந்த விழிநீர்க்குள் வெற்றிபூண்ட
கைத்துமுக்கிப் பெருமறவீர்! கீழ்வங் கத்தைக்
கனவினின்று நினைவுலகம் மீள்கொண் டீரே!

நிலவரணும் நீரரணுந் தாண்டிச் சென்றீர்!
நெஞ்சுருக நடை நடந்தீர்! வான் பறந்தீர்!
குலவரணும் மதவரணும் கடந்து நாட்டின்
கொடி மரத்தைக் காப்பதற்குப் பெரும்போ ரிட்டீர்!
புலவருளம் துடிதுடிக்க மொழியமுங்கப்
புறப்பட்டீர்! பொருதுகளஞ் செல்ல லானீர்!
'நிலவுவரும்; காற்றுவரும்; வருவீர்' என்றே
நின்றிருந்தோம்! வெற்றிவந்த தும்மைக் காணோம்!

பாக்கித்தானியர் கொட்டம்:

கரிபுகுந்த வயல்போலக் கழுகு பாய்ந்த
கவின்மாடத் திளம்புறவின் குஞ்சைப்போல
நரிபுகுந்த சிறைக்கோழிக் கூட்டைப் போல
நாய்புகுந்த தனிவீட்டின் அடுக்களைபோல்
எரிபுகுந்த வைத்தூறு போலக் கோடி
எலிக்கூட்டம் குடிபுகுந்த நெற்சாலைப் போல்
பரிபுகுந்த கொல்லையைப்போல் பாக்கித்தானின்
படைபுகுந்த கீழ்வங்கஞ் சிதைந்த தம்மா!

குற்றுயிராய்க் குலையுயிராய்த் துடிக்கக் கொன்றார்!
கூட்டத்தின் உட்புகுந்து சிதைத்தார்! எங்கும்
சுற்றிவந்து தெருத் தெருவாய் மக்கள் தம்மைச்
சுட்டழித்தார். இடையிடையே கண்ணில் பட்ட

நெற்றிளமைக் கன்னியரைக் கற்ப ழித்தார்
நிற்கவைத்தே உடைகளைந்து குலைக்க லானார்!
வற்றலிலாப் பெண்வேட்கை, மண்ணின் வேட்கை,
வஞ்சகருக் கென் வேட்கை மிஞ்சிற் றம்மா!

இந்தியப் படைஞர் வீரம்!

மொழியுரிமை விடுதலைப்போ ராய் முகிழ்த்து
முசுபிர்இ ரகுமானின் தலைமையின்கீழ்
வழியொன்று கண்டிடவே எழுச்சி கொண்ட
வங்கத்துப் புலிக்கூட்டம் வேண்டிநிற்க
'விழியன்றே ; எரிபந்தம்! எங்கள் கைகள்
வேலன்றே; வேட்டெஃகம்! தோள்கள் குன்றம்!
பழியன்றே எங்கட்கு! பாக்கித்தானே
பார்த்துக்கொள்"-என்றெழுந்தோம்! துணைநின் றோம்,
நாம்!

நாமென்றால், நம்படைகள்! அரிமாக் கூட்டம்!
நரிக்கூட்டம் நடுங்கிற்று; பாய்ந்தோ டிற்று!
"தாமெ"ன்று 'தூமெ'ன்று துவைத்திட்டார்கள்!
தரங்கெட்டுச் சிதறிற்று,படைகள்! ஐயோ!
'ஏமெ'ன்றார்; 'ஆம்" என்றார். எவர் தாம் விட்டார்?
இருகிழமை போர்முட்டம்! அடடா; த்சொ! த்சொ!
தீமென்ற வாயினராய்த் துடித்தார்! நம்மின்
செருத்தலைவர் தம்காலைத் தொட்டார்; விட்டோம்!

இந்தியர் ஒற்றுமை!

ஐம்பத்துக் கோடியரும் ஒன்றாய் நின்றே
அரசுக்குக் கைகொடுத்த மாட்சி தன்னை
மொய்ம்பற்ற கோழையரும் உணர்வதுண்டோ?
மூக்கற்ற தோல்விக்குப் பேச்சும் உண்டோ?
பைம்புற்கள் குத்துவதால் களிறு சாமோ?
பாக்கித்தான் படைநமக்கிங் கெந்தமூலை?
ஐம்புலனும் வென்றான்முன் ஆற்றலற்ற
அரைக்கிறுக்கன் என் செய்வான்? தோற்றுப்போனான்!

நம் வெற்றி!

வாயுரத்துக் கத்திநின்ருன் யாகியாக்கான்!
வயிரத்துத் தோள்களெல்லாம் எழுந்துநின்று
பாயிரத்தைப் பாடுகையில் படுத்துப் போனுன்!
பாட்டொன்றை முடித்திருந்தால் என்னவாகும்?
நாயுரத்தை நம்பிஅமெ ரிக்கன் வந்தான்;
நம்முரத்தை நம்பியன்ருே நாமிருந்தோம்!
ஆயிரத்து நானூறு சதுரக் கற்க
ளன்ருே நாம் பெற்றநிலம்! இழப்பைம்பத்தே!

வெற்றிகொண்ட நம் படைஞர்க்கு வாழ்த்து!

அறம்பாய்ந்த நன்னெஞ்சம், அருள்செய் நோக்கம்,
அடிநிலமும் பிறர் வெளவ இடங் கொடாத
மறம்பாய்ந்த வல்லுடலம், இணைந்த தோள்கள்,
வாழ்ந்திருந்த பழம்பெருமை—இவற்றை எண்ணிச்
செறும்பார்ந்த மிகுதுணிவு! செற்றம் பாய்ச்சும்
செங்கண்ணர் எம்படைஞர்! அவரைப் போலும்
திறம்பாய்ந்த படைமறவர் உலகில் உணடோ?
திசையெட்டும் புகழ்பெற்றே அவர்கள் வாழி!

சில அருஞ்சொற் பொருள்:

அஃகம்	—	நீர் ஊற்று
ஒஃகிய	—	இடுகிய
கைத்துமுக்கி	—	கைத்துப்பாக்கி
வேட்டெஃகம்	—	துப்பாக்கி
மொய்ம்பு	—	வீரம்
செற்றம்	—	சினம்
செறும்பு	—	மறச்செருக்கு

தென்மொழி கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50உருபா	14உருபா
அரையாண்டுக் கட்டணம்:	5உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75 காசு	90 காசு	1-10

நூறுசிரியம்

பெருஞ்சித்திரன்

(துரை-மாணிக்கம்)

பாட்டு: ௬௪ (விரிப்பு—தொடர்ச்சி)

இவைகொடு தெளிவே இறையவன் உண்மை: முற் கூறப் பெற்ற வாழ்வாகிய சிறு இடைப்பொழுதில், உள்ளத் தெழுந்த முற்றுசையான் பற்றப் பெற்ற வினையையுடைய மாந்தர், தமக்கியல் பாகிய நலிவும் மெலிவும் தவிர்க்கப் பெற்றவராயும், செவ்விதின் அமைந்த ஐம் பொறி முனைப்புடையவராயும் இருந்து அறியப்பெறும் தெளிவின் அளவாகத்தான் இறைவனின் உண்மை புலப்படும்.

என்னை ? நமக்குற்ற கண் வழியாகப் பார்க்கப் பெறுவதே இவ்வுலகமும் புடவியும். நமக்குற்ற செவிகளின் வழியாகக் கேட்கப் பெறுவதே இங்குற்ற ஓசையும், ஒலியும். இவ்வாறே பிறபொறிகளின் வழியாக அறியப் பெறுவனவே பிற உணர்வுகளும். இனி, இறை யுண்மையோ இவை யாவற்றையும் கொண்டு தெளியப் பெறுவதாகும். இவற்றுள் ஒன்று முரணுற்றாலும் அவ்வுண்மை சரிவரத் தெளியப் பெறாது போம். இனி, இவை துலங்கத் துலங்க இவற்றின் அடிப் பற்றியதாய மனமும் அறிவும் அகன்மையும் நீட்சியும் அடையப் பெற்று அவ் விறையுண்மையை மேன்மேலுந் துலங்கச் செய்வதும், அவை மழுங்க மழுங்க அவ்வுண்மையும் மழுக்கலுறுவதும் தன்னறி வான் கண்டு கொள்க.

இனி, இவ்வுலக அறிவுணர்வெல்லாம் ஓருயிர்க்கு இருவழிப் புலப்பாடுடையது. தன்வழித் தானறிதலும் பிறர்வழித் தானறிதலு மாகும். தன்வழித் தானறிதல் என்பது தனக்குற்ற கருவி கரணங் களால் தானே யறிதல்; பிறர் வழித் தானறிதல் என்பது பிறர்க்குற்ற கருவி கரணங்களால் அறியப் பெற்றவற்றை அவர்வழிக் கேட்டுத் தானறிந்து கொள்வது. உலகியலறிவு யாவும் ஒருவன் தன்வழித் தானே யறிதல் இயலாது. இனி பிறர் வழித் தானறிதலும் ஓரளவே என்க. இனி, இவ்விருவகையானும் அறியப் பெறும் அறிவு பலவா

யிருக்க, இறையறிவு தன்வழித் தானறிதலில் தலையாய தென்க. அறிதலினும் தெளிதல் நுண்மை யுடைத்தாதல் பற்றித் தெளிவு எனலாயிற்று.

உண்மை—உள்ளமை. உள்ளதாந்தன்மை.

அவன்றிறல் மேற்றே அண்டம் : அவ்விறைப் பொருளின் திறத்ததே அணுவும் அண்டமும். மேற்று-மேலது-வழியது-அடிப்படையானது. அண்டம்-அணுக்கள் அண்டியது அண்டம்.

அண்ணியது-சுருங்கியது-குறுகியது-விரிவின் சுருக்கம்-அணு.

அணுக்கள் நெருங்கியது அண்டம்.

அவிழ்தலும் குவிதலும் அரிது மற்றறிவே! மற்று, மலர்தலையும், ஒடுங்குதலையும் அறிவது அரிது; இயலாதது. அண்ட இடை நிகழ்வின் ஒரு சிறு கூறுபாட்டைக் கூடச் சரிவர உணர முடியாத நாம் அதன் மலர்ச்சியையும் அழிவையும் அறிய முடியாது.

அவிழ்தல்—கட்டுக்குள் இருந்து நெகிழ்தல்-விரிதல்-மலர்ச்சியுறுதல். குவிதல்—கட்டுக்குள் ஒடுங்குதல்-ஒன்று கூடுதல்.

இப்பாடல், இறைப்பொருளின் இருப்புநிலைபற்றித் தெளிவிலாதார்க்கும் தெரிந்தார்ப் போலப் பிதற்றுநர்க்கும், உலகியல்பு கூறி, அறிவின் தன்மையும் அறியப்பெறும் பொருளின் நுண்மையும் புலப்படுத்துவதாகும்.

இது பொதுவியலென் திணையும் முதுமொழிக் காஞ்சி யென் துறையுமாம்.

---

0 தமிழ்ப் பகைவர்களைத் தரை மட்ட மாக்கித் தனித்தமிழ் மறவர்களுக்கு நல்வழி காட்டும் திங்கள் ஈரிதழ்!

“கைகாட்டி”

ஆசிரியர்:

மு. தமிழ்க்குடி மகன், க.மு.,

தனியிதழ்: 25 காசு

ஆண்டுக்கட்டணம்: 6 உருபா அரையாண்டுக்கட்டணம்: 3 உருபா

தொடர்பு கொள்க!

‘அல்லி அச்சகம்’

மதுரை - 2.

கனலும் இந்தி எதிர்ப்புத் தீ!

(ஒரு மடல்)

அன்புள்ள ஆசிரியருக்கு,

தமிழர்களே தமிழர்களைப் புரிந்து கொள்ளாத இழி நிலையும் தமிழர்களே தமிழர்களுக்குக் குழி பறிக்கும் பழக்கமும் இன்னமும் மாறிவிட்டதாகத் தெரியவில்லை. நம்மவர் எந்த ஒரு குறிக்கோளையும் இறுதி வரை நின்று எதிர்க்கக் கூடிய திறம் அற்றுக் கிடக்கின்றனர். வங்காள நாட்டு மக்களைப் பற்றி வாய் கிழியப் பேசுவார்கள். ஆனால் அவர்களுக்கிருக்கும் உறுதியில், வீரத்தில், ஒற்றுமையில், கொள்கைப் பிடிப்பில் ஆயிரத்தில் ஒரு பங்காவது நம்மிடம் இருக்கவேண்டும் என்று நினைக்கமாட்டார்கள். அப்படியே ஒரு சிலர் குறிக்கோளுக்காக வாழ்ந்தாலும் அதனைத் தகர்ப்பதோ அல்லது அதுகண்டு நகைப்பதோ இவர்களுக்கு வழக்கமாகப் போய்விட்டது. இந்தியா முழுவதும் இன்று பேசுகின்றது, தமிழகம் இந்தியை எதிர்க்கின்றது என்று. ஆனால் உண்மையில் இந்தியை வளர்க்கும் முதல் மாநிலம் நம் தமிழகந்தான்! இங்கு எத்தனைப் 'பரந்த' மனப்பான்மையினர் வாழ்கிறார்கள். 'நாட்டு ஒற்றுமையை' உயிர் மூச்சாகக் கொண்டிருக்கிறார்கள்; இவர்களால் நம் தமிழகம் இந்தியைப் பாலூற்றி, தேனூற்றி வளர்க்கின்றது. குறிக்கோளோடு இயங்கும் உண்மைத் தமிழர்களுக்கு நஞ்சு ஊற்றிப் புதை குழி தோண்டுகிறது. கொதித்தெழவோ குமுறி வெடிக்கவோ இயலாமல் கட்டளை தடுக்கின்றது. ஆனால் தடை நெடுநாள் நீடிக்காது. ஒரு நாள் வங்காள நாட்டில் வெடித்ததைப் போல் வெடிக்கலாம். அங்கு உருது மொழியை எதிர்த்துத்தான் வெஞ்சினம் வெடித்தது. வெற்றியும் கண்டது.

இந்தி எதிர்ப்பு உணர்ச்சி பலரிடையே நீறுபூத்த நெருப்பாக இருந்து வருகிறது. அதனை ஊதிச் சீண்ட நினைக்கிறார்கள், சிலர். உறங்குகின்ற புலியின் மீது கல்லெறிகிறார்கள். அவ்வண்ணமே நம் தமிழகத்தில் இந்தியை வளர்க்கும் 'புனித'ப் பணியில் ஈடுபடத் தொடங்கியிருக்கும் கிண்டி பொறியியற் கல்லூரியில் ஒரு சில 'தமிழர்களும்' தமிழரல்லாதவர்களும் எங்கள் உள்ளத்தை உள்ளுணர்ச்சிகளைப் புண்படுத்தியிருக்கின்றார்கள். அதனைக் குறிப்பிடவே இம்மடல் விடுக்கின்றேன.

தமிழக அரசின் கொள்கை இந்தியை முழுமூச்சுடன் எதிர்ப்பது என்றிருக்க, அரசுக் கல்லூரியான எங்கள் கிண்டிப் பொறியியற் கல்லூரியில் அதற்கு மாறுக நடக்கத் திட்டமிட்டிருக்கிருர்கள். இந்தியை எதிர்த்துப் பல ஆண்டுகளாக நடந்து வரும் இப்போராட்டத்தில் பலன் இன்னும் கிட்டவில்லை. பலன் கிடைக்கும் வரை எந்த முறையிலும் இந்தியை எதிர்ப்பதே தம் கொள்கையாகத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள். மற்ற எந்த முறையிலும் இந்திக்கோ இந்தித் திரைப்படங்களுக்கோ எதிரிகளாகார். ஆதலின் தமிழர்களின் கொள்கை வெற்றி பெறும் வரை தமிழகத்தில் இந்திப் படங்கள் திரையிடப்படுவதையோ, இந்தி பாடமொழியாக்கப்படுவதையோ (Central Schools, I.I.T. etc.,) நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்நிலையில் எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதைப் போல எதிர்ப்புகள் இருந்தும் எங்கள் கல்லூரியில் மாதம் ஓர் இந்திப்படம் கட்டாயம் திரையிட வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிருர்கள். கல்லூரியின் வரலாற்றில் காணப் புதுமையிது. இதனைக் கண்டு வெந்து புழுங்கிக் கொண்டிருக்கும் ஆனால் உறுதியோடு காத்திருக்கும் மாணவருலகம் ஒரு நாள் எரிமலையாக வெடிக்கும் என்பது திண்ணம். கட்டாயம் திரையிடப்பட வேண்டுமென்று ஒரு சிலர் எங்கள் கல்லூரியில் முனைந்திருப்பது கட்டாயம் இன்னுமொரு போராட்டம் நடத்துங்கள் என்று அறை கூவல் விடுப்பது போல் இருக்கிறது. உறங்கிக்கொண்டிருக்கும் உணர்ச்சிகளை உலுக்குகிருர்கள். நம் தமிழகத்தில் வெஞ்சினம் எவ்வளவு விரைவாகப் பரவும் என்று அறியமாட்டார்கள். தீயென நெடுகிலும் பரவத்தான் எங்கள் உள்ளத்தில் நெருப்பைக் கொட்டியிருக்கிருர்கள். அந்நெருப்பு எங்கள் உள்ளத்தைப் பொசுக்காது. எங்கள் உள்ளத்தில் கனன்று கொண்டிருக்கும் உணர்ச்சிகளைத் தூண்டும்; பிறகு வெடிக்கும்; குமுறும். இஃது உறுதி.

செ. இரா. செல்வக்குமார்,
செயலர், தமிழ் மன்றம்.
பொறியியற் கல்லூரி, சென்னை—25.

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	6-00	4-00
தனியிதழ் ,,	0-25	0-50	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

இராவணன் தமிழனல்லன்..!?

பேராசிரியர். க. ப். அறவாணன் க.மு , கீ.க.தே.
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

இராமாயணமே ஒரு கற்பனைக் கட்டுக் கதை! சில வரலாற்று நிகழ்ச்சிகளின் மேல் அக்கதை கட்டப் பெற்றிருக்கலாம். ஆனால் அதற்கு ஆரிய திராவிடப் போராட்டம் காரணியமாக இருந்திருக்க முடியாது. அதில் வரும் இராவணன், கும்பகர்ணன் முதலியோரும், வாலி, அநுமன், சுக்கிரீவன், வீடணன் முதலியோரும் தமிழர் (பழந்திராவிடர்) அல்லர். வேறு இனத்தவரே.... தமிழன், ஆரியர் வரவாலும் உறவாலும் பெற்றவற்றைவிட விட்டவையே மிகுதி. பீடுமிக்க தமிழக வரலாற்றின் கேடுமிக்க உண்மை இது... ஆனால் இழிவு மிக்க இராமாயணக் கதையுறுப்பினர்க்குத் தமிழர் பொறுப்பேற்க முடியாது. தமிழர் பண்பாட்டியலுக்கும் அக்கதையின் இழிவு நிகழ்ச்சிகளுக்கும் சிறிதும் தொடர்பே இல்லை என்று வரலாற்றுச் சான்றுகளுடன் மெய்ப்பிக்கிறது இக்கட்டுரை! படித்துப் பாருங்கள்......!

இராமாயணக்கதை இந்திய மொழிகளுக்கெல்லாம் சொந்தம். கிழக்காசிய நாடுகளுக்கெல்லாம் சொந்தம். இக்கதை பல்வேறு நாடுகளில், பல்வேறு – மொழிகளில், பல்வேறு முறைகளில் புனையப்பட்டுள்ளது. இது புனைவே எனினும் ஒரு காலத்தில் உண்மையில் நடந்த ஆரிய–திராவிட வல்லாண்மைப் போராட்டத்தை நடுவாகக்கொண்டு புனையப்பட்ட 'இதிகாசம்' என்றும், இக்கதையில் இடம்பெற்றுள்ள கிட்கிந்தாபுரி, இலங்காபுரி ஆகிய நகரங்களில் வாழ்ந்த வாலி, அநுமன், சுக்கிரீவன் முதலியன வானரரும், இராவணன், கும்பகர்ணன் முதலான இராக்கதரும், பண்டைய காலத்தில் வாழ்ந்த திராவிடரே என்றும், கருதுவோர் இருக்கின்றனர். இத்தனைக்கருத்துகளுக்கும் இடந்தரும் வான்மீகி இராமாயணம் இன்றைய அளவிலேயே தொடக்கத்திலும் இருந்திருக்க வாய்ப்பில்லை. இன்றைய நூலில், வான்மீகிக்குப் பின் வாழ்ந்த பலரது கைச்சரக்குகள் இடைச்செருகல்களாக நுழைக்கப்பெற்று விட்டன. இப்போதுள்ள பாலகாண்டமும், உத்தரகாண்டமும் பழைய மூலத்தில் இல்லை. இவ்விரண்டு

காண்டங்களும், ஏனைய காண்டங்களில் இடைநுழைந்த பாட்டுகளும் வான்மீகி இராமாயணத்தைப் பலரது நூலாக்கி விட்டன.[1] வான்மீகி, இதிகாசத்தை எழுதிய காலம் பற்றிப் பல கருத்துகள் உண்டு. கி. மு. 3000-இல் எழுதப்பட்டது என்றுகூட ஒருவர் எழுதி இருக்கிறார். இத்தகு கற்பனைக் கருத்துகள் எல்லாம் இடிபடும்படியாக, புதிய ஓர் ஆராய்ச்சியை, பூனா தெக்கான் கல்லூரித் தொல்பொருள் ஆய்வுத் துறைத் தலைவர் பர். எச். டி. சங்காலியா வழங்கி இருக்கிறார்.[2]

வான்மீகி இராமாயணத்தின் இன்றைய வடிவம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதன்று. அக்கதை நிகழ்ந்தகாலம் இரும்புக் காலமே (கி. மு. இரண்டாம் நூற்றாண்டு) ஆகும். இராமாயணக் கதைஞர்கள் தென்னிந்தியாவையோ, இலங்கையையோ கிஞ்சித்தும் அறிந்திருக்கவில்லை. இராமாயணத்தில் குறிக்கப்படும் கிட்கிந்தாபுரி கற்பனைப்படைப்பே. அந்நூலுள் வரும் 'லங்காபுரி' இன்றைய சிலோன் அன்று. இக்கருத்துகளுக்கான சான்றுகளை மொழியியல், தொல்லியல், நிலவியல், பயிரியல் துணைகொண்டு சங்காலியா நிறுவியிருக்கிறார்.

1. இரும்புக்காலத்திற்கு முந்திய பழைமையுடையது செம்புக்காலம். செம்புக் காலத்தோடு தொடர்புடைய தடயங்கள் எதுவும் இராமாயணத்தில் காணப்பெறவில்லை. 'கலயாசா' (Kalayasa), 'கர்சயாசா'(Kersayasa),'ஆயசா'(Ayasa) எனவரும் பொருள்கள் எல்லாம் செம்பினால் செய்யப்பட்டவை அல்ல. இரும்பினால் செய்யப்பட்ட பொருள்களே. இரும்பு கிரேக்க உறவுக்குப் பின் கி. மு. இரண்டாம்நூற்றாண்டு அளவில்தான் இந்தியருக்கு அறிமுகமானது. மேற்கண்ட இரும்புக்கருவிகள் அல்லாமல், இராமன் வளைத்த உருத்திரவில்லும் இரும்பினால் செய்யப்பட்டதே. ஆதலால் கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரும்புத்தடயங்கள் இராமாயணத்தில் காணப்படுவதால், இராமாயணம கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது அன்று என்று தெளிவாகிறது.

---

1. A history of Sanskrit Literature-A. Berriedale Keith - 7th Edition, 1963 p. 42
2. The Hindu. Madras Edition. 4-10-71.

2. சீதை அணிந்திருந்த உடை, 'கௌசேய' (Kauseya) என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இது சீனத்துப்பட்டு ஆகும். இந்தச் சீனத்துப் பட்டும், கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் இந்தியரால் அறியப்பட்டிருக்கவில்லை.

3. இராமாயணத்துள் வரும் பேசா உறுப்பினர்களுள் முகாமையானது 'மோதிரம்'.மோதிரம் அணியும் வழக்கத்தைக் கிரேக்கரே இந்தியருக்கு வழங்கினார்கள். கிரேக்கர் வரவு, கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதன்று என்பது முன்பே சுட்டப்பட்டது.

4. அயோத்தி, இலங்காபுரி நகரங்களில் கோபுரங்களும், கோபுர முடி(சிகரங்)களும், விமானங்களும் உயரமாக அமைந்திருந்தன என்று வண்ணிக்கப்பட்டுள்ளது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் வான்முட்டும் கோபுரங்கள் இருந்ததற்கான சான்றுகள் இல்லை. காரவேலனின் அத்திக்கும்பாக் கல்வெட்டில் தான் முதன்முதலாகக் கோபுரம் பற்றிய குறிப்பு வருகிறது. இக் கல்வெட்டின் காலம் கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டுதான்.

5. இராமனின் பிறப்புத் தொடர்பாகக் கோளிருப்பு(திதி) நாள், ஓரை(நட்சத்திரம்), பருவம்(ருது) ஆகியன தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இவை புலவருக்கு இருந்த தெளிந்த ஐந்துறுப்பு (பஞ்சாங்க) அறிவை எடுத்துரைக்கின்றன. ஐந்துறுப்பு(பஞ்சாங்க) முறை இந்தியருக்கு கி. பி. 484-க்கு முன்பு தெரியாது. ஆதலின் இப்பகுதி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டினதாகவே இருத்தல் வேண்டும்.

6. இராம இராவணனுக்கும் இடையே, வாலி சுக்கிரீவனுக்கும் இடையே போர்கள் நடந்தன. இப்போரில் இராம இலக்குவர், விற்களையே பயன்படுத்துகின்றனர். இராவண கும்பகருண முதலான அரக்கரும், வாலி,சுக்கிரீவர் முதலான வானரரும் 'சாலா'(Sala trees) மரங்களையே போருக்குப் பயன்படுத்துகின்றனர்.'சோரியாரொபுசுடா [Shorea Robusta] என்று பயிரியலில் பெயரிட்டு வழங்கப்படும் சாலா மரங்கள், தென்னிந்தியாவிலோ, இலங்கையிலோ வளர்வதே இல்லை. இம்மரங்கள் இன்றைய அசாம் மலைக்காடுகளிலும் சோடா-நாகபுரி மேட்டு நிலத்திலும், அமர்கண்டக் மேட்டுநிலத்திலுமே வளர்கின்றன. இதினின்று, இராமாயணத்தில் குறிக்கப்படும், சாலா மரங்களையே கையாளும் வானரரும், அரக்கரும் தென்னிந்தியாவையோ

இலங்கையையோ சேர்ந்தவர் அல்லர் என்றும் அவர்கள் வட இந்தியாவில் வாழ்ந்த காட்டு மாந்தர்களே என்றும் முடிவுக்கு வரலாம்.

அறிஞர் சங்காலியாவின் முடிவுகள் சான்றுகளை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்டவை. எனினும் அவர் முடிவுக்கு எதிரான சான்றுகளையும் நினைவு கூர்ந்தாக வேண்டும்.

1. கி. மு. இரண்டாம் நூற்றுண்டிற்கு முன் இரும்பு பற்றிய குறிப்புகள் இல்லை என்பது சங்காலியாவின் குறிப்பு. ஆனால் கி.மு. 2900-இல் தோன்றிய பாணினி வியாகரணத்திலே இரும்பாலான 'அய்சுத்துன'[Aysthuna] 'அய்சுகுசா'[Ayskusa] என்ற பொருள்கள் குறிக்கப்பட்டுள்ளன.[3] சங்காலியா தொல்லியல் அறிவியலை வைத்தெடுக்கும் முடிவை, இலக்கியச்சான்று கட்டுப்படுத்தாது. அதுமட்டுமன்றிப் பாணினியின் காலம் கி.மு. 2900 என்பது முடிந்த கருத்தன்று. சமற்கிருத இலக்கிய வரலாற்றை எழுதிய அறிஞர்கள் பெரிடேல்கீத், கீல்கான் ஆகியோர்க்கு மேற்குறித்த கால வரையறை உடன்பாடு இல்லை.

2. இராமாயணத்தில் இரும்பு பற்றிய குறிப்பைத் தவிர செம்பைப் பற்றிய குறிப்பில்லை என்ற கருத்திற்கு எதிராகச் சிலர் வாவில்லா(Vavilla) பதித்துள்ள இராமாயணப் பதிப்பு, பாலகாண்டத்தில் 37-ஆம் சருக்கத்தில், தங்கம், செம்பு, இரும்பு என்பன குறிக்கப்படுவதை எடுத்துக்காட்டுவர்.[4] பாலகாண்டம் பிற்காலத்தில் எழுதப்பட்டுச் சேர்க்கப்பட்டது என்பது அறிஞர். ஆர்.மாக்டோனெல் கருத்து. ஆதலால், பாலகாண்ட வழக்காறுகள் செல்லுபடி ஆகா.

3. இரிக் வேதத்தில் தங்கம் பற்றியும், இரும்பு பற்றியும், சீனத்துப்பட்டைப் பற்றியும் வரும் சான்றுகளைச் சிலர் எடுத்துக் காட்டலாம்.[5] இவை பிற்காலச் செருகல்களாகலாம் என்பது ஒருபுறம் இருக்க,தொல்லியல் அடிப்படையில் நிறுவப்பட்ட கருத்தை இலக்கிய இயல் ஒன்றை மட்டுமே கொண்டு எதிர்வழக்காடுவது வரலாற்று நெறி ஆகாது.

---

3. The Hindu. Letters to the Editor. 23-10-71
4. The Indian Express. Madras. 24-10-71
5. The Hindu - Madras 17-10-71

4. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன் ஐந்துறுப்பு [பஞ்சாங்கம்] அறிவு இந்தியருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை; ஆனால் கி. பி. ஜந்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட 'இராம சகசர நாமம்' 'இலலித சகசரநாமம்'என்ற இரு நூற்களிலும், 'பகவத்கீதை' மூன்றாங் காண்டத்திலும் ஐந்துறுப்புக் குறிப்புகள் வருகின்றன.[6] பகவத்கீதை மகாபாரதம் தோன்றியபோதே தோன்றிய நூல் அன்று. பின்னே சேர்க்கப்பட்டது என்பதில் இரண்டாங் கருத்து இருக்க முடியாது. ஆதலின் அதனை எதிர்ச்சான்றாகக் கொள்ளுதற்கில்லை. வரலாற்று அறிவியல் முடிவுகளை வலுவாக்கிக்கொள்ள, இலக்கியச் சான்றுகளைத் துணைச் சான்றுகளாகக் கொள்ளலாம். மாறாக இலக்கியச் சான்றுகளுக்காக அறிவியல் சான்றுகளை மாற்றிக்கொள்ளல் இயலாது.

5. சங்காலியாவின் ஆராய்ச்சியில் முடிவைத்தாற் போல் இருப்பது சாலாமரங்களைப் பற்றிய அறிவியல் குறிப்புத்தான். இதற்குப் பல மறுப்புகள் கூறப்படுகின்றன:

1. 'சாலா' என்பது குறிப்பிட்ட மரவகையைக் குறிக்கும் சொல் அன்று. எல்லா மரத்தின் கிளைகளையும் குறிக்கும் பொதுச்சொல். பல இடங்களில் இச்சொல் முழுச்சொல்லாகக் கையாளப்படுவதில்லை. வெறும் பின்னொட்டாக (Suffix)வும் வழங்கும்.[7]

2. சாலா மரங்கள் வட இந்தியாவில் மட்டும் வளர்வனஎன்பது பொருத்தம் இல்லை. இம்மரம் தென்னிந்தியாவிலும் வளர்கின்றது. தமிழில் 'ஆச்சாமரம்' எனக் குறிக்கப்படுவது இம்மரத்தின் இனத்தைச் சேர்ந்ததுதான் என்பர் பேராசிரியர்.

யக்ஞ நாராயண அய்யர்[8] சே. எசு. காம்பிள் என்பார் வெளியிட்டுள்ள Flora of the Madras Presidency எனும் நூலில், சாலா,

---

6. Ch. Ramakrishna Rao-s' article. The Indian Express 24-10-71
7. The Indian Express. Reader's Review. 20-10-71
8. Antiquity of the forest flora of India. By Prof. Yegna Narayana Iyer

மரங்கள், பாலகொண்டா மலைக்குன்றுகளிலும், விசாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள தென்கோதாவரியிலும் வளர்கின்றன எனக் குறித்துள்ளார்.[9] 'Dictionary of Economic Plant in India என்ற அகரமுதலி சாலாமரம் தென்னிந்தியச் சோழமண்டலக் கடற்கரையில் வளரும் எனச் சுட்டுகிறது. சாம்பியன் அகரமுதலி சாலா மரங்கள் கஞ்சமலைக் குன்றுகளிலும், ஒரிசாவிலும் வளருகின்றன என்று காட்டுகிறது.[10]

இவ்விரு மறுப்புகளுள் முதல் மறுப்பு மொழித்தொடர்பானது. 'சாலா' என்னுஞ் சொல்லுக்கு, 'கிளை' என்று மட்டும் பொருள் இருந்தால் சரி. அச்சொல்லுக்குச் 'சோரியா ரொபுசுடா' மரத்தைக் குறிக்கும் பொருளும் உண்டு என்பதை மறுத்தற்கில்லை. இரண்டாம் மறுப்பு, சாலா மரங்கள் தென்னிந்தியாவில் இன்று வளருகின்றன என்பதை வற்புறுத்தும் சான்றுகளே தவிர, இராமாயணக் காலத்தில் சாலா மரங்கள் இங்கு வளர்ந்தன என்பதற்கு அடிப்படையாகாது. அன்றியும் இலங்கையில் இராவண கும்பகருணர் முதலிய அரக்கரும் சாலா மரத்தையே போருக்குப் பயன்படுத்துகின்றனர் என்ற குறிப்புக்கு மாறுக, இலங்கையில் சாலா மரம் வளர்ந்தது; வளரும் என்பதற்குச் சான்றுகள் இல்லை. தமிழகத்தில் இன்று மிளகாய்ச் செடி ஊர் தோறும் வளர்கிறது. ஆனுல் மிளகாய்ச் செடி மேனுட்டார் இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. பண்டைய காலத் தமிழகத்தில் மிளகுக் கொடி உண்டே தவிர, மிளகாய்ச்செடி இல்லை. இஃது உண்மை வரலாறு. மிளகாய்ச் செடி இன்று வளருகிறது என்பதற்காக, அகநானூற்றில் வரும் 'மிளகு' இன்றைய மிளகாய்ச் செடி என்று தருக்கமிடுவது வழு. இது போன்று தான், சாலாமரங்கள் இன்று தென்னிந்தியாவில் வளருகின்றன என்பதற்காக இராமாயணக் காலத்திலேயே இவை இங்கு வளர்ந்தன என்பதுவும்.

பர். சங்காலியா தம் கொள்கையை நிலை நாட்ட ஆறு காரணியங்களைத் தொல்லியல், நிலவியல், பயிரியல் அடிப்படையில் நிறுவி இருக்கிருர். இவற்றுள் மோதிரத் தொடர்பான அவரது கருத்தையும், கோபுரம், விமானம் தொடர்பான அவருடைய கருத்

9 Flora of the Madras Presidency-By J. S. Gamble
10 The Hindu, Madras 12—10—71

தையும் யாரும் மறுக்கவில்லை. சான்றுகள் இல்லை. ஆதலால் மறுக்க இயலவில்லை போலும். ஏனைய நான்கு மறுப்புகளுள் முதல் மூன்று இலக்கியத்தை நடுவாகக் காட்டி மறுக்கப் பட்டவை. இராமாயணக் கதை உறுப்பினர்கள் தொண்ணூறு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் மகாயுக காலத்தில் வாழ்ந்தவர்கள் என்று ஒரு மறுப்புரைகாரர் கூறியுள்ளார்[11] மாந்தன் தோன்றியதே 6,00,000 ஆண்டுகட்கு முன்பு தான். அவனைச் சுற்றிய வரலாறு 6000 ஆண்டுகட்கு முன்னே தான் தொடங்குகிறது.[12] இச்சூழலில் ஆரிய இராமன் குரங்குக்கு முன்னேயே தோன்றிவிட்டான் என்பது கோமாளித்தனம்.

சிலர் வான்மீகி இராமாயணம் கிட்கிந்தா காண்டம் 41 ஆவது சருக்கத்திலுள்ள ஒரு சொலவ(சுலோ)கத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, தென்னிந்தியா வான்மீகிக்கும், இராமாயண உறுப்பினர்களுக்கும் அன்றே அறிமுகமாய் இருந்தது என்று தருக்கிடுகிறார்கள். உண்மையில் குறிப்பிட்ட சொலவகம் பிற்காலச் செருகலே! வான்மீகி இராமயணத்தின் மூலம் மூன்று பகுதிகளில், மூன்று வேறு பாடமாக அமைந்திருக்கிறது. ஒவ்வொரு மூலத்திலும் உள்ள மூன்றில் ஒரு பகுதி சொலவகங்கள் மற்ற இரு மூலங்களிலும் காணப்பெறுமல் வேறு பாடங்கள் உள்ளன.[13] இவ்வாறு ஐயத்திற்கு இடமான பாடங்களுள் மேற்குறித்த பாடமும் ஒன்று. ஆதலின் இச்சொலவகத்தை வைத்துக்கொண்டு இராமனையும் தமிழ் நாட்டையும் முடி போடுதல் பொருத்தமாகாது.

சிங்களம் என்பதுவும், இலங்கை என்பதுவும் ஒன்றே என இன்று கருதப்படுகிறது. ஆனல் இராமாயணத்தில் குறிக்கப்படும் 'லங்காவும்' 'சிங்களமும்' ஒன்றல்ல. வேறு வேறு. வியாசபாரதம் வானபருவம் 51-ஆம் அதிகாரத்தில் தர்மராசன்கீழ்ப் பணியாற்றும் அரசர்களை, கிருட்டிணன் கூறுகிறுன். அப்பட்டியலுள் சிங்கள வேந்தன் தனியாகவும், லங்காபுரி வேந்தன் தனியாகவும் குறிக்கப் பட்டுள்ளனர். மார்க்கண்டேய புராணம் 55-ஆம் அதிகாரம், 20 – 29 ஆம் பாட்டுகளில் தென்னிந்தியா, சிங்களம், லங்கா, ஆகிய மூன்றும்

11 The Hindu Madras Letters to the Editor 17-10-71
12 The Origin of Man and his Culture-By Stephen Fuchs 1963 P: 9.
13 Sanskrit Literature. By A. A. Macdonell P. 303

வெவ்வெறு நாடுகளாக வண்ணிக்கப்படுகின்றன. சிரீமத் பாகவதத்தில் 5-ஆம் கந்தம் பத்தொன்பதாம் அதிகாரத்தில் தீவு நாடுகள் எட்டு பேசப்படுகின்றன. அந்நாடுகளுள் ஏழாம் நாடு சிங்களம்! எட்டாம் நாடு 'லங்கா' ஆதலின் இன்றைப ஈழமாகிய சிங்கள நாடு வேறு; இராமாயண லங்கா வேறு என்பது தெளிவு.[14]

அறிஞர் பரமேசுவர (அய்யர்), இராமாயணத்தில் குறிக்கப் பட்டுள்ள 'லங்கா'வின் இருப்பிடம் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆய்வு நிகழ்த்தியுள்ளார். அவ்வாய்வின்படி, அன்றைய லங்கா நடுப் பைதிர (மத்திய பிரதேச)த்திலுள்ள விந்தியமலைக் காடுகளில் சபல் பூருக்குக் கிழக்கே 13 கி. மீ. தொலைவில் உள்ளது என்று அறியப் படுகிறது.[15]

இலங்கைத் தொல்லியல் அறிஞர் பா். பரணவிதானா் என்பவ ரும் இராமாயண 'லங்கா' இன்றைய இலங்கையன்று என்று நிறு வியுள்ளார்.[16]

1925- இந்தியக் கீழ்த்திசை இயல் கருத்தரங்கில் சா்தாா் கிபே (Sirdar Kibe) லங்கா தொடர்பான ஓர் ஆய்வு வழங்கியுள்ளார். அவ்வாய்வில் விந்திய மலைச்சாரலுக்கும், மண்டலேசுவர் நா்மதா ஆற்றங்கரைக்கும் இடைப்பட்ட (Lat. 22°, 15'. Long '75° 40') சோலி என்ற ஊரே அன்றைய லங்காவாகும் என்கிறார்.[17]

அறிஞர் மான்காட் (Mankad) சுந்தரகாண்டம் பதிப்பு முக வுரையில் பல்வேறு துணைச் சான்றுகளைக் காட்டி, பரமேசுவர அய் யர் கருத்தையும் மேற்கோளாக எடுத்துக் காட்டி, 'லங்கா' இன் றைய இலங்கை அன்று என்று முடிவுரைத்திருக்கிறார்.[18]

பான் (Bonn) நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் சாகோபி (Jacobi of Bonn) சைன இராமாயணமான 'பௌம்சாரியா' Paum

---

14 The Hindu. Letters to the Editor 27-10-71
15 Dr. H. D. Sankaliya's article. The Hindu 4-10-71
16 The Indian Express Madras 23-10-71
17 V. L. N. Chari - The Indian Express 11-10-71
18 Ramayana Sundara Kanda-Critical edition-Baroda

Chariya) என்ற நூலை ஆராய்ந்து லங்கா, அசாம் மலைக்காட்டில் உள்ள ஓரிடமே என்று முடிவு எடுத்திருக்கிறார்.[19]

அறிஞர் வி. எச். வாடேர் [V. H. Vader] பழங்கதை மரபியல் கழகம் வெளியிட்ட காலாண்டு இதழ் ஒன்றில், இந்து மாக்கடலில் உள்ள மாலடிவ் தீவுகளை அன்றைய லங்கா என்று தருக்கமிடுகிறார்.[20]

அறிஞர் என். எசு. அதிகாரி என்பார், ஆசிய அறிவியல் கழக இதழ்க்கட்டுரையில், இராவணன் வாழ்ந்த லங்கா சுமேரியாவே என்ற தீர்வுக்கு வருகிறார்.[21]

ஆக இராமாயண 'லங்கா' இன்றைய ஈழம் அன்று என்பது தெளிவு. வாலியையோ, இராவணனையோ திராவிடப் பழங்குடியினர் என்பது ஆய்வுப்பார்வையில் அடிபட்டுப் போகின்றது. பழங்கால வேந்தரையும், மாந்தரையும் பல மனைவியரை மணந்து கொள்ளவும் பரத்தையரோடு உறவுகொள்ளவும் தாராள இசைவுவழங்கிய தமிழ்க் குமுகாயம் பிறன் மனைவியைப் பெண்டாளுதலைக் கடுமையாகக்கருதி விலக்கி இருக்கிறது. ஆதலால் இப்படிப்பட்ட கருத்தூன்றிய குமுகாயத்தில், தம்பி மனையாளைப் பெண்டாளும் வாலியோ, அயலான் மனைவியை உறவாட அழைக்கும் இராவணனோ பிறந்திருக்க முடியாது. பெண், தன் காதல் விருப்பத்தை வெளிக்காட்டக் கூட நாகரிகத்தை வரையறுத்த மரபு ஊன்றிய குமுகாயத்தில், இராமனை வலிந்து தழுவத்துடிக்கும் சூர்ப்பநகை தோன்றியிருக்க முடியாது. ஆதலின் பர், சங்காலியாவின் கருத்து தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் சரியாகவே இருக்கிறது. ஆதலின் இராமாயணக் கதையுறுப்பினர்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும், திராவிட இலங்கை நாட்டுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை! 0

---

19 Hemachandra's Jain Ramayana

20 V. H. Vader in the Quartelly Journal of Mythical Society Vol. 17

21 N. S. Adhikari - Journal of the Bombay Branch of Royal Asiatic Society. Vol: 25

கணிப்பான் (COMPUTER)

— சி. இராசாங்கம் —

மாந்தனது அறிவாற்றலால் உருவான எண்ணிலடங்காப் பொறிகளுள் கணிப்பானும் ஒன்றாகும். இச்சிறு கட்டுரை கணிப்பானைப் பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள உதவாவிட்டாலும் ஓரளவு அறிந்து கொள்ள உதவுமென்பதில் ஐயமில்லை. கணிப்பான் என்பது ஒரு தனிப் பொறியன்று. அது பலபொறிகளை உள்ளடக்கிய பொறிக்குடும்பமாகும்.

கணிப்பான் செயலினை ஈண்டுச் சுருக்கிக் கூறுவோம். புகுத்தும் கருவிகளின் வாயிலாகத் திணிக்கப் பெறும் செய்திகளையும் விளக்கங்களையும் கணிப்பான் பெற்றுக்கொள்கிறது தேவைப் படுகின்றபோது பயன்படுத்துவதற்காக இவை அப்பொறியினுள் தேக்கி வைக்கப்படுகின்றன. வினாக்கள் தொடுக்கப்படும்போது, நிகழ்வமைப்பிலுள்ள அறிவுரைகட்கேற்ப கணிப்பான் தேக்கியிலிருந்து தகுந்தவிளக்கங்களைத் தேர்ந்தெடுத்துத் தீர்வு (Solution) உருவாக்கும் நிலைக்குக் கொணர்கிறது, பின்னர் உருவாக்கப்பட்ட முடிவுகள் வெளியிடு கருவியின் வாயிலாகக் கிடைக்கின்றன.

மற்ற பொறிகளைப் போன்று கணிப்பானும் அறிவற்றதாகையால், அதனை இயக்கி அறிவுறுத்தினாலன்றித் தானே செயல்படாது. எனவே மாந்தனது அறிவாற்றலால் உருவாக்கப்பட்ட விளக்கத் தொகுப்பின் துணை கொண்டுதான் அது செயல்பட வேண்டியதாகிறது. படிப்படியாக ஆய்ந்து தீர்வு காணுதலைத் தொடர் இணைப்பாக்குவதால் ஒரு சிக்கலுக்கு எளிதே விடை கிடைத்துவிடுமன்றோ. இவ்வாறே எந்தெந்தச் செயல்களைத் தொடர்ச்சியாகச் செய்வதால் தகுந்த விடையைக் கணிப்பான் அளிக்க முடியுமோ, அதனை உருவாக்கல் நிகழ்வமைப்பு (Programme) எனப்படும். கணிப்பானின் செயல்திறன் பெரும்பாலும் நிகழ்வமைப்பின் தரத்தைப் பொறுத்தே வேறுபடுகின்றது. குறிப்பாக ஒரு வினாவிற்கான விடை நிகழ்வமைப்பில் விடுபட்டு விட்டால், அவ்வினாவைப் பின்னர் தொடுக்கும் போது கணிப்பான் விடையிறுக்காது. நிகழ்வமைப்பு உருவாக்கலென்பது சிக்கலான வேலையாகும். ஒரு நிகழ்வமைப்பில் நூற்றுக் கணக்கான அறிவுரைகள் (Instructions) இருக்கும். ஒவ்வாத விளக்கங்களையும், தீர்வு உருவாகும்போது ஏற்படுகின்ற பிழைகளையும் சரிசெய்வதற்கான அறிவுரைகளும் நிகழ்வமைப்பில் இடம் பெறுகின்றன. கணக்கீடுகளைச் சரிபார்ப்பதற்கான குறிப்புகளும்

சேர்க்கப்படுகின்றன. நிகழ்வமைப்பினை ஐந்து பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன: சிக்கலை [Problem] ஆய்வு செய்தல், விளக்கங்களை ஆற்றொழுக்கு முறையில் நிரல்படுத்தல், அவற்றைக் கணிப்பானின், மொழியில் குறியிடுதல் (Coding), நிகழ்வமைப்பை உருவாக்கல், உருவாக்கப்பட்டதின் துல்லியத்தை ஆய்வு செய்தல்.

கணிப்பான் தனது கணக்கீடுகளை ஈரிலக்க (Binary) முறையிலேயே செய்கிறது. ஈரிலக்க முறையில் சுன்னமும் [zero] ஒன்றும் (One) மட்டுமே இடம் பெறும். இம்முறையில் ஒன்றிலிருந்து ஒன்பது முடியவுள்ள எண்கள் அனைத்தும் O, 1 என்ற இரண்டினைக் கொண்டே எழுதப்பெறுகின்றன; அது மட்டுமன்று, எழுத்துகளும் [Alphabets] அவ்வாறே குறிக்கப்படுகின்றன. எண்களும் அவற்றிற்கு நேரான ஈரிலக்க எண்களும் கீழே தரப்படுகின்றன.

எண்	1	2	3	4	5	6	7	8	9
ஈரிலக்க எண்	1	10	11	100	101	119	111	1000	1001

ஈரிலக்க எண் எவ்வாறு வழக்கிலுள்ள எண்ணுக்கு நேரானதாகிறது என்பதனை ஓர் எடுத்துக் காட்டால் விளக்குவோம். 7 என்ற எண் ஈரிலக்க முறையில் 111 என்றெழுதப்படுகிறது.

$7 = 111$

$= 100+10+1$

$\approx 10^2+10+1$ என்றெழுதலாம்.

$\approx 2^2+2+1$ [ஏனெனில் ஈரிலக்க முறையில் 10 என்ற

$\approx 4+2+1=7$ அலகிற்குப் பகரமாக 2 என்ற எண் எழுதப்படும்.]

ஏனைய எட்டு எண்களையும் இது போன்றே காட்டலாம். கணிப்பான் ஈரிலக்க முறையை ஏன் பயன்படுத்துகிறது என்று கேட்கத்தோன்றுகிறதல்லவா? ஏனெனில் ஈரிலக்கங்களைத் தொடர்பான மின்மத் துடிப்புகளாக [Electronic Pulses]க் கணிப்பானால் எளிதாக மாற்றிக் கொள்ளமுடிகிறது. மேலும் இம்முறையில் கணக்கீடுகள் விரைவாகச் செய்யப்படுகின்றன. மின்மத் துடிப்புண்டாதல் '1' என்றும் அவ்வாறின்மை 'O' என்றும் கணிப்பானால் உணரப்பெறும்.

அடுத்து, ஈரிலக்க எண்கள் எவ்வாறு மின்மத்துடிப்புகளாக மாற்றப் படுகின்றன என்பதனை நோக்குவோம். குறியிட்ட விளக்

கங்கள், துளையிட்ட அட்டை (Punched cards) தாள் நாடா, காந்தப்பசை நாடா, ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றன் வழியாகக் கணிப்பானுக்குள் அனுப்பப்படுகின்றன. துளையிட்ட அட்டை, தாள் நாடா, ஆகியவற்றிலுள்ள துளைகள் '1' என்ற எண்ணைக் குறிக்கும் துளையிடாத பகுதி '0' என்பதைக் குறிக்கும். காந்தப்பசை நாடாவில் இவ்விரு எண்களும் காந்தஞ்சுழித்த புள்ளிகள் (Polarised spots) வடிவில் குறிக்கப் பெறுகின்றன. துளையிட்ட அட்டை அல்லது தாள்நாடா அல்லது காந்தப்பசை நாடா உணர்வு நிலையத்தில் [Sensing Station] படிக்கப்படும்போது, '1' வரும் போதெல்லாம் மின்சுற்றுஉண்டாகிறது. '0' வரும்போதெல்லாம் மின் சுற்று முறிகிறது. இதனாலுண்டாகும் தொடரான மின்மத் துடிப்புகளே கணிப்பானின் எல்லா வகையான கணக்கீடுகளிலும் பயன்படுகின்றன.

மாந்தனின் இயக்கத்திற்கு ஐம்பொறிகளும், அவற்றின் இணைந்த ஒத்துழைப்பும் இன்றியமையாததாகின்றது. இது போன்றே கணிப்பான் என்ற பொறிமாந்தனும் இயங்க ஐந்து பொறிகள் [Machines] உதவுகின்றன. அவையாவன; 1. உட்புகுத்தும் கருவி 2. தேக்கி அல்லது நினைவுப் பிரிவு 3. அடக்கியாளும்பிரிவு 4. கணக்குப்பிரிவு அல்லது ஏரணப்பிரிவு 5. வெளியிடும் கருவி இவ்வொன்றின் செயலினையும் சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

உட்புகுத்தும் கருவி (Input Device):-துளையிட்ட அட்டை, தாள் நாடா, காந்தப்பசை நாடா இவற்றில் ஒன்றின் வழியாக விளக்கங்கள் உள்ளே அனுப்பப்படுகின்றன. மூலத்திலிருந்த விளக்கங்களை அட்டை, தாள் நாடா ஆகியவற்றில் துளை வடிவத்திலும் காந்தப் பசை நாடாவில் காந்தஞ்சுழித்த புள்ளி வடிவத்திலும் மாற்றியமைக்கின்றனர். இவற்றிலுள்ள செய்திகள் முறையே அங்குள்ள அட்டைப்படிப்பான்கள் அல்லது ஒளிப்படிப்பான்கள் அல்லது படிப்பு முனைகள் இவற்றால் படிக்கப்பெற்று, தொடர்மின்மத் துடிப்புகளாக மாற்றப்படுகின்றன.

தேக்கி [Storage Unit]:— இப்பிரிவுதான் உட்புறம் அனுப்பப்பட்ட செய்திகளை நினைவில் வைத்துக் கொள்கிறது. எனவே -தான் இதனை நினைவுப்பிரிவு என்றும் அழைக்கின்றனர். உள்நினைவு; வெளிநினைவு என நினைவு இருவகைப்படும், கணிப்பான் விரைவாகச் செயல் படுவதற்கும், நிறைய செய்திகளைப் பயன்படுத்து வதற்கும் உள் நினைவே சிறந்தது. இது காந்த நுண்ணறைகளில் நிலைபெறு

கின்றது. தேக்கியில் காந்தமாக்கப்பட்ட சிறு வளையங்கள் தொடர்ச்சியாக உள்ளன. இவ்வளையங்களில் அயச உயிரகை [Ferrous Oxide] பூசப்பட்டுள்ளது. வளையங்களின் வழியே உணர்வுக் கம்பிகள் இணைக்கப் பட்டுள்ளன. இவ்வுணர்வுக் கம்பிகளின் மூலம் மின்சாரம் ஒரு திசையில் பாய்ச்சப்படும்போது, வளையங்களைச் சுற்றி காந்தக்களம் [Magnetic Field] உண்டாகின்றது. இந்நிலை '1' என்ற எண்ணைக் குறிக்கும். பாய்ச்சும் மின்சாரத்தின் திசையினை மாற்றினால், காந்தக்களமும் மாறி '0' என்ற எண்ணைக் குறிக்கின்றது. இது போன்றே, விளக்கங்களனைத்தும் '0', '1' என்ற இரண்டினைக் கொண்ட குறியீடுகளாகவே தேக்கி வைக்கப்படுகின்றன.

அடக்கியாளும் பிரிவு [Control Unit] :— தீர்வுக்காக எந்த ஒரு சிக்கலையும் கணிப்பானுக்குள் கொண்டு வருமுன், என்ன செய்ய வேண்டு மென்பதனைப் பொறிக்கு அறிவுறுத்த வேண்டும். இதனைத் தான் இப்பிரிவு செய்கிறது. பல பிரிவுகளின் வேலைகளை ஒழுங்குபடுத்தல், அவற்றை இணைத்து ஒரு முழு அமைப்பாக ஆக்குதல் போன்றவற்றையும் இப்பிரிவே கவனிக்கிறது. நினைவுப் பிரிவில் விளக்கங்கள் சரியான முறையில் படிக்கப்பெறுகின்றனவா வென்றும், தொடர் மின்மத்துடிப்புகள் முறையான வழியில் செல்லுகின்றனவாவென்றும் உறுதி செய்வதே இப்பிரிவின் தலையாய வேலையாகும். அடக்கியாளும் பிரிவு கணிப்பானின் மிகவும் இன்றியமையாத பிரிவாகும்.

கணக்குப் பிரிவு [Arithmatic Unit] :— விளக்கம் உருவாக்கம் (Data processing) இங்கு தான் நடை பெறுகின்றது. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்ற நான்கு வகையான கணக்கினைத் தவிர, ஏரணச் செயல்களையும் செய்யக்கூடிய திறனை இப்பிரிவே பெற்றுள்ளது. தீர்வு உருவாக்கல் விளக்கங்களைப் பிரித்தல், தேடுதல் போன்றவற்றையும் செய்வதால் இதனை ஏரணப்பிரிவு [Logical Unit] என்றும் அழைக்கின்றனர்.

வெளியிடும்கருவி [Output Device] :— உருவாக்கப்பட்ட முடிவுகளை நினைவுப்பிரிவில் மீண்டும் படிக்கச் செய்து அவற்றைக் கணிப்பானிலிருந்து நாம் படிக்கக்கூடிய வடிவில் வெளியிடுவது இதன் வேலை. நேரடியாக வெளிவருகின்ற முடிவுகள் துளையிட்ட அட்டை அல்லது தாள் நாடா அல்லது காந்தப்பசை நாடா ஆகியவற்றில் குறியிட்டு முறையிலேயே அமைந்திருக்கும்; அவை படிக்கக்கூடிய மொழியில், பின்னர் மாற்றியமைக்கப்பட்டு வெளி வருகின்றன.

[சுவடி : 9. ஓலை: 6-7 இதழ்த் தொடர்ச்சி]

செய்து வாய்பாட்டு வினைகள்

இரா. கோதண்டராமன், க. மு (தமிழ்) க. மு. (மொழியியல்)
மொழியியல் துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

தமிழில் ஒன்பது வாய்பாட்டு வினைகள் வினையெச்சப் பொருண்மையைக் குறிப்பனவாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிருர்.[1] இவற்றுள் செய்யூ வாய்பாட்டு வினைகளும் அடங்கி நிற்கின்றன. வினையெச்சப்பொருண்மையைக் குறித்துநிற்கும் ஒன்பது வாய்பாட்டு வினைகளில் செய்தென. செயற்கு ஆகிய இரண்டு வாய்பாட்டு வினைகளைத் தவிர ஏனையவை முற்றுப் பொருண்மையையும் உணர்த்துவனவாகும்.[2] செய்யூ வாய்பாட்டு வினைகள் தமிழில் எச்சப் பொருண்மையைக் குறித்தாலும் பழைய மலையாள இலக்கியங்களில் அவை எதிர்வுப் பொருண்மையைக் குறிக்கும் முற்று வினைகளாகவும் வழங்குகின்றன.[3] ஆகவே தொடக்கத்தில் செய்யூ வாய்பாட்டு வினைகள் முற்றுப் பொருண்மையை உணர்த்தி நின்றன எனத் துணிபலாம்.

செய்யூ வாய்ப்பாட்டு வினைகள் செய் + ஊ என்ற அமைப்பினவாகி -ஊ என்னும் இடைச்சொல் எதிர்வு அல்லது நிகழ்வுப் பொருண்மையை உணர்த்தும் காலக்கிளவியாகக் கருதலாம். இக்

---

1 செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செயியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி [சொல் சேனு: 228]

2 முற்றெச்சங்கள்: — இரா. கோதண்டராமன்

3 The Evolution of Malayalam Morphologhy–L. V. Rama swamy Iyyer Page 70

(முன்பக்கத் தொடர்ச்சி)

கணிப்பானின் விலை மிகுதியாக இருப்பதால் இதனைப் பயன்படுத்த பொருளியலில் பின் தங்கியுள்ள நாடுகளால் இயலாமற் போகின்றது. உடலுழைப்பினுல் செய்ய இயலாத அளவிற்கு நிறைய விளக்கங்களடங்கின வேலைகளைச் செய்வதற்கும், தானியக்கக்கட்டுப்பாடு [Automatic Control] தேவையாகின்ற தொழிற்கூடங்களிலும் கணிப்பான்கள் பயன்படுகின்றன. பலவகைகளில் கணிப்பான் நமக்கு உதவ மட்டுமே முடியும் என்பதனையும் இதனை மாந்தனின் திறமைக்கு ஈடாகக் (Substitute) கொள்ள முடியாதென்பதனையும் நாம் மறந்து விடலாகாது.

காலக்கிளவி உகரமாகக் குறுகி செய்யு வாய்பாட்டு வடிவின வாக அமைந்து, ஒன்றன்பால் எதிர்கால வினைமுற்றுகளாக நிற்கும் நிலை துளு மொழியில் காணப்படுகின்றது.[4] எ-டு பரு (<பர்-உ) '(அது) பருகும்'; பரு (baru bar-u) '(அது) வரும்' தினு (<தின்-உ) '(அது) தின்னும்' செய்பு வாய்பாட்டு வினைகள் குடகு மொழியில் இசைவுப் பொருண்மை (Permissive Notion) யைக் குறிக்கின்றன.[5] எ-டு கெய்யு (கெய்-உ) '(வேலை) செய்யலாம்'; மாடு (<மாடு-உ) 'செய்டலாம்'

மேற்குறித்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு செய்யூ, செய்யு ஆகிய இரு வாய்பாட்டு வினைகளும் தொடக்கத்தில் எதிர்வு அல்லது நிகழ்வுப் பொருண்மையைக் குறிக்கும் வினை முற்றுகளாக நிகழ்ந்தனவாகக் கருதலாம். செய்த்து வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகள் செய்யு (செய்+உ) வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றியனவாகக் கொண்டு அவற்றைச் செய்+உ+து என்ற பொது அமைப்பின் கீழ்க் கொண்டு ரலாம். உகரக் காலக்கிளவின் முன் நின்ற வினைமுற்று விகுதியாகிய துகரக் கிளவியின் மெய் இரட்டித்து[6] செயுத்து (அல்லது செய்யுத்து) என்ற வாய்பாட்டு வடிவமும், பின்னர் உகரம் கெட்டு செய்தது வாய்பாட்டு வடிவமும் அமைந்ததாகத் துணியலாம். உகரவீற்று வினையடிகளைப் பொறுத்தவரையில் செயுத்து (= செய்யுத்து) வாய்பாட்டுவடிவமும் ஏனையவினையடிகளில் செய்த்து

4 Dravidian verb Morphology- P. S. Subrahmanyam Page. 259 & 318.

5 Ibid Page. 254

6 காலக்கிளவியாகிய உகரத்தின் முன் வினைமுற்று விகுதியாகிய துகரக்கிளவியின் மெய் இரட்டித்து நிற்பதை நோக்கும் போது காலக்கிளவியின் தொன்மை வடிவம் மெய்யீற்றதாக இருந்திருக்குமோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது. பொதுவாக யகர மெய் ஈற்றில் நிகழும் போது அது வீழ்ந்துபடும்நிலை மொழியில் காணப்படுகின்றது. இதைக் கருத்தில்கொண்டு காலக்கிளவியாகிய உகரத்தின் தொன்மை வடிவை*உய் என உருவமைக்கலாம். இதற்கு நிகராக இறந்தகாலக் கிளவியாக * இய் அமைதலையும் காணலாம். எனினும் இவ்வகையில் மேற்கொண்டு ஆராய்ச்சி தேவை.

(> செயுத்து) வடிவமும் அமைந்து எதிர்வு அல்லது நிகழ்வுப் பொருண்மையை உணர்த்தும் செய்து வாய்பாட்டு வினைகள் தோற்றம் கொண்டனவாதல் வேண்டும். இதனைப் பின் புலமாகக் கொண்டு கட்டளை வினைகளின் பகுதியாக நிற்கும் செய்த்து செயுத்து வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளைப் பின்வருமாறு ஆராயலாம்.

காய்த்து < காயுத்து — காய் + உ + து
பார்த்து < பாருத்து — பார் + உ + து
கற்று < கல்த்து — கலுத்து — கல் + உ + து
கேட்டு < கேள்த்து — கேளுத்து + கேள் + உ + து
அடித்து < அடிய்த்து-அடியுத்து-அடி + உ + து. அடி (-?* அடிய்)
நீத்து < நீய்த்து — நீயுத்து — நீய் + உ + து
பூத்து < பூய்த்து — பூயுத்து — பூய் + உ + து
உழைத்து < உழைய்த்து — உழையுத்து — உழை + உ + து
படுத்து < { ?படுவ்த்து — படுவுத்து — படு + உ + து
?படு + உ + து }

இறந்தகாலப் பொருண்மையை உணர்த்தும் செய்த்து வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளின் அமைப்பையும், நிகழ்வு அல்லது எதிர்வுப் பொருண்மையை உணர்த்தும் அதே வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளின் அமைப்பையும், இவ்விரு வாய்பாட்டு வினைகளின் வடிவில் வரலாற்றுப் போக்கில் நிகழ்ந்த மாறுதல்களையும் பின்வருமாறு குறிக்கலாம்.

1 செய் + இய் + து > செபிய்த்து — செய்த்து — இறப்பு
2 செய் + உ + து > செயுத்து — செய்த்து — நிகழ்வு/எதிர்வு

நிகழ்வு அல்லது எதிர்வுப் பொருண்மையை உணர்த்தி] வரலாற்று நிலையில் முற்றுவினைகளாக நிகழ்ந்த செய்ந்து (-செயுந்து மற்றும் செய்த்து (-செயுத்து) வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளின் தடங்கள் தமிழிலும் ஏனைய திராவிட மொழிகளிலும் அழுத்தமாக பதிந்துள்ளன. செய்ந்து வடிவினவாகத் திரிந்த செய்ந்து (= செய்யுந்து) வாய்பாட்டு வடிவினவாகிய வினைகள் செயுது (= செய்யுது) வாய்பாட்டு வடிவினவாக

அமைந்து பேச்சுத்தமிழில் ஒன்றன்பால் வினைமுற்றுகளாக வழங்கி நிகழ்வுப் பொருண்மையை உணர்த்தலாயின. எ-டு. நடக்குது (-நடக்குந்து); கடிக்குது (-கடிக்குந்து). நெல்லை மாவட்டப் பேச்சுத் தமிழில் வழங்கும் நிகழ்கால வினைமுற்றுகளும் செய்யுது (-செய்யுந்து/செயுந்து) வாய்பாட்டு வினைகளை நிலைக்களனாகக் கொண்டு தோன்றியவையாகும். எ-டு. நடக்குதான் (-நடக்குந்தான்) 'நடக்கிறான்'; படிக்குதாள் [-படிக்குந்தாள்] 'படிக்கிறாள் பழந்தமிழில் பெருவாரியாகக் காணப்படும் செய்யுதும் [செய்யுது—உம்], செய்யுதி [-செய்யுது—இ], செய்யுதிர் [செய்யுது-இர்] ஆகிய வாய்பாட்டு முற்று வினைகளும் செய்யுது வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றியவையாகும். இவ்வினைகள் தொல்காப்பிய காலத்துக்கு முன்பே வழக்கில் இருந்தனவாகக் கருதலாம். மலையாளத்தில் நிகழ்கால வினைமுற்றுகளாக விளங்கும் செய்யுந்நு வினைகள் செய்யுந்து வாய்பாட்டு வினைகளின் திரிபேயாகும்.[7] பழங்கன்னடத்தில் வழங்கும் நிகழ்கால வினைமுற்றுகளில் ஒரு பிரிவின செய்யுது வாய்பாட்டு வினைகளைப் பகுதியாகக் கொண்டு இயல்கின்றன.[8] எ-டு. கேள்தபை [கேள்து-அபை. கேள்து-கேள்ந்து-கேளுந்நு-கேளும்-து] '(நீ)கேட்கிறாய், கோத்தம் மற்றும்

---

7 மலையாள நிகழ்காலவினைமுற்றுகளைக் கால்டுவெல்முதற்கொண்டு எல். வி. ராமசாமி அய்யர் (The Evolution of Malayalam], Morphology ஏ. சி. சேகர் (Evolution of Malayalam), பி எசு. சுப்பிரமணியம் (Dravidian verb Morphology) ஈறுக ஆராய்ந்துள்ளனர். இவர்கள் அனைவரும் தமிழ் நிகழ்கால வினைமுற்றுகளில் காணப்படும் -கின்று- என்னும் கால இடைநிலையே மலையாளத்தில் -குந்து [-க்—உந்து] உந்து எனத் திரிந்ததாக ஒப்பித்து வருகின்றனர். கின்று என்பதில் உள்ள இகரம் உகரமாகவும், ன கரம் நகரமாகவும் திரிவதற்குரிய காரணங்களை ஒலியியல் அடிப்படையில் இவர்கள் யாரும் யாப்புற விளக்கிக் காட்டவில்லை· காட்டவும் முடியாது. செய்யுந்து வாய்யாட்டு வினைகளின் கண் அமைந்த உந்து (-உம் + து) என்பதே -உந்நு என மலையாளத்தில் திரிந்து நிகழ்வுப் பொருண்மையைக் குறித்துச் செல்கின்றது.

8 Dravidian Verb Morphology:-P. S. Subrahmanyam. pp. 256.

தொதுவ மொழிகளில் காலக்கிளவியை ஏற்கும் பகுதிகள் செய்து வாய்பாட்டு வடிவினவாக நிற்கின்றன. இவ்வாய்பாட்டு வினைகளை இறந்தகால வினைகளாகக் கருதுவர் பேராசிரியர் எமினேவும், பி.எசு. சுப்பிரமணியமும்.[9] ஆனால் அவற்றை நிகழ்வு அல்லது எதிர்வுப் பொருண்மையை உணர்த்தும் செய்து வாய்பாட்டு வினைகளாகக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது.

பழந்தமிழில் காணப்படும் ஒளித்தி (ஒளித்து + இ. புறம் 8·8); இறத்தி (இறத்து + இ. புறம். 8-7) போன்ற நிகழ்வு அல்லது எதிர்வுப் பொருண்மையை உணர்த்தும் முன்னிலை வினைமுற்றுகள் செய்த்து (< செயுத்து) வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளின்பாற்படும். இவ்வாய்பாட்டு வடிவில் அமைந்த செய்து வாய்பாட்டு வினைகளைப் பகுதியாகக் கொண்டு தோன்றிய நிகழ்கால வினைமுற்றுகளைக் கன்னடத்தில் காணலாம்[10] தெலுங்கில் எதிர்கால வினைமுற்றுகளைச் செயுத்து (= செய்யுத்து] வாய்பாட்டு வடிவங்களைப் பகுதியாகக் கொண்டு நிகழ்கின்றன.[11] எ-டு. பாடுது(னு) [-*பாடுத்துனு]' [நான்] பாடுவேன்'; பாடுதுமு (-*பாடுத்துமு) '(நாம்) பாடுவோம்'; பாடுதுவு [-*பாடுத்துவு]; '(நீ) பாடுவாய்'; பாடுதுரு [-*பாடுத்துரு] '(நீங்கள்) பாடுவீர்கள் [அவர்கள்] பாடுவார்கள்'

9 In both Kota and Toda the past tense and the present-future tense (as well as some other formations) are formed on a special stem, that may be called the secondary stem. This secondary stem historically corresponds to the past stem of Tamil-Malayalam and some other languages P. S. Subrahmanyam-Dravidian Verb Morphology. page 116.

10 A Comparative Grammer of the Dravidian or South Indian family of Languages. R. Coldwell. Page 490.

11 இத்தகைய வினைமுற்றுகள், இக்கட்டுரையாளரின் தாய்மொழியில் காணப்படுகின்றன. தெலுங்கில் வழங்கும் நிகழ்கால வினைமுற்றுகளும் செயுத்து (≈ செய்யுத்து] வாய்பாட்டு வடிவினவாகிய வினைகளைப் பகுதியாகக் கொண்டவையாகும். எ-டு நவ்வுதுன்னனு [நவ்வுது — உன்னனு. நவ்வுது.*நவ்வுத்து] (நான்) சிரிக்கிறேன். நவ்வுதுன்னமு [நவ்வுது-உன்னமு) [நாம்] 'சிரிக்கிறோம்' நவ்வுதுன்னவு] நவ்வுது-உன்னவு[நீ] சிரிக்கிறாய்'

செய்து வாய்பாட்டு வினைகள் வினையெச்சமாக நிகழும் தொடரன்கள் மூன்று கால வினைமுற்றுகளையும் பயனிலையாக ஏற்கின்றன.

4 கண்ணன் உண்டு உறங்கினான்.
5 கண்ணன் உண்டு உறங்குகிறான்.
6 கண்ணன் உண்டு உறங்குவான்.

இத்தொடரன்களில் 4-ஆம் தொடரனில் அமைந்த உண்டு என்னும் செய்து வாய்பாட்டு வினை பயனிலையோடு காலப்பொருண்மையை உணர்த்துவதில் இசைந்து நடக்கிறது. ஆகவே உண்டு என்னும் வினை இறந்தகாலப் பொருண்மையை உணர்த்தும் செய்து வாய்பாட்டின் பாற்படும். ஐந்தாம் தொடரனில் அமைந்த உண்டு என்னும் வினை இறந்தகாலப் பொருண்மையையும் நிகழ்காலப் பொருண்மையையும் உணர்த்தவல்லது. ஐந்தாம் தொடரனைக் கீழ்வருமாறு ஆராயலாம்.

7 கண்ணன் உண்டான்; உறங்குகிறான்
8 கண்ணன் உண்கிறான்; உறங்குகிறான்

இதை அடிப்படையாகக்கொண்டு 5 ஆம் தொடரனில் அமைந்த உண்டு என்னும் வினை, 7-ஆம் தொடரனாக ஆராயப்பட்டால் உண் + இம் + து என்ற அமைப்பினையும், 8-ஆம் தொடரனாக ஆராயப்பட்டால் உண் + உம் + து என்ற அமைப்பினையும் உடையதாகக் கருதலாம். ஆறும் தொடரில் அமைந்த உண்டு என்னும் வினை இறந்த கால பொருண்மையை உணர்த்துவதாகக் கொண்டால் பயனிலையோடு காலப் பொருண்மையை உணர்த்துவதில் அது முரண்பட்டு நிற்கும். ஆறும் தொடரனை விரிக்கும் போது உண்டு என்னும் வினை உண்பான் என்ற எதிர்கால வினையாக அமைவதால், இத்தொடரனில் அமைந்த செய்து வாய்பாட்டு வினையை இறந்த காலப் பொருண்மையை உணர்த்துவதாகக் கருதுவதற்கில்லை. மாறாக அஃது எதிர்காலப் பொருண்மையை உணர்த்தும் செய்து வாய்பாட்டு வினையாகவே கருதப்பெறும். இதனடிப்படையில் 6-ஆம் தொடரனில் அமைந்த உண்டு என்னும் வினையின் அமைப்பை உண் + உம் + து எனக் கொள்ள வேண்டும்.

[தொடரும்]

செ. சொ பி. பேரகரமுதலி

உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்.

உறுப்பினர் பட்டியல்

திருவாளர்கள்:-- 1. தாமரை பெருஞ்சித்திரன், கடலூர்-1, 2. மா. பூங்குன்றன், கடலூர்-1. 3. புலவர் இறைக்குருவன். மதுரை-10. 4. இறை. பொற்கொடி, மதுரை-10. 5. காளியப்பன், (நாராயணன்) நெய்வேலி-1. 6. செ. பன்னீர்ச்செல்வம், சென்னை-2. 7. த. ளங்கோ, புதுவை-1. 8. செ. சித்தார்த்தன், அறி. இ. (பி. எசி.) சென்னை-25. 9. கி. மகிழ்கோ, புதுவை-5. 10. திருநாவுக்கரசு, பொ. இ. வேலூர்-9.

11. புலவர் சா. அடல் எழிலன், திருவையாறு. 12. ந. முத்துக் குமரன், அறி. இ. ஆ. ப. குளத்துப்பாளையம். 13. திருச்சி மாவட்டத்தான், 14. ந. செங்குட்டுவன், திருச்சி-14. 15. அருண்மொழியன், திருச்சி-14. 16. பொற்செழியன், (வே.நா. இரேணுகோபால்,) பெங்களூர்-1. 18. உணர்வுப்பித்தன், (ஆ. சொக்கலிங்கம்) திருச்சி-10. 18. உளங்கவரழகன், இராசிபுரம். 19. நாவை-சிவன் (தமிழ்மகன்) கீரனூர். 20. ச. கலியமூர்த்தி, காவேரிநகர்.

21. வே. மாறன், பெங்களூர்-2. 22. சி. பூ. மணி, பெங்களூர்-21. 23. க. அப்பாத்துரை, நடுப்பட்டி. 24. ச. சின்னத்துரை, நெய்வேலி-1. 25. அன்புவாணன், (த. கோவிந்தன்) நெய்வேலி-1. 26. அ. அருள்நெறி, நெய்வேலி-2. 27. ஆ. கருப்பையா, நெய்வேலி-3. 28. இரா. அப்பாவு, நெய்வேலி-3. 29. இரா. பெருந்தேவன், நெய்வேலி-2. 30. மு. அறவாழி, நெய்வேலி-1.

31. பொன்-தமிழ்மாறன் (இராமசாமி), நெய்வேலி-1. 32. தமிழநம்பி, அறங்கண்டநல்லூர். 33. புலவர் பா. வீரப்பன், ஆனைமலை, 34. நா. இளமாறன், பெகும்பகல்லாக்குடியிருப்பு, 35 க. மலர்ச்செல்வன், (தயாராசன்) மதுரை-1. 36. பர். பொ. இளங்கோ, உக்கரம. 37. செ. பெரிய நாடார், தெற்குச்சூரன்குடி. 38. சே. கு. அரசங்கோவன். மேட்டூர் அணை-1. 39. ஞா. தாமசு, மணிமுத்தாறு. 40. கே. பூபதி, பெங்களூர்-16.

41. துரை. சம்பத்குமார், க. இ. ஈரோடு-1. 42. அறவாழி, தளவாய்ப்பட்டணம். 43. இல. க. இரத்தினவேல், திருச்சிராப்பள்ளி-1. 44. சு. திருஞானம், திருச்சிராப்பள்ளி-1. 45. ஆம்பூர் கே. ஏ. மணவாளன், பெங்களூர்-5. 46. இர. பரணன், பரணம். 47. மு. வ. பரமசிவம், நடுப்பட்டி. 48. ம. சோசு; உத்தமபாளையம். 49. மு. திருநாவுக்கரசு, அண்ணாமலைநகர். 50. க. இராமசாமி, கோவில்பட்டி.

51. ஓ. பிச்சை, தெற்குத்தெரு, மேலூர். 52. இல. வேலரங்கன், சோமையனூர். 53 செம்பீரம், பெங்களூர்-1. 54. செ. பெருமாள், கடத்தூர். 55. புலவர் வ. அரிஅரன், ஒண்டிப்புதூர். 56. ந. தேவராசன், வேலூர்-1. 57. க. செகநாதன், பி.எசி. ஈரோடு. 58. இராசமாணிக்கம், காரைக்குறிச்சிப்புதூர். 59. வெ. கிழார், பெங்களூர்-21. 60. சா. பொழிலன், நெய்வேலி-2.

61. கா.சே. சாத்தப்பிள்ளை, பி. எசி. பி. டி. ஆமூர். 62. புலவர். கா. இளமுருகன், புன்செய்ப்புளியம்பட்டி. 63. ப. கு. முருகவேள், புன்செய்ப்புளியம்பட்டி. 64. புலவர் நா. அருணன், எரங்காட்டுப்பாளையம். 65 பா. அறவாழி, சென்னை-7; 66 அ. வெள்ளிமலையார், திருச்சிராப்பள்ளி-8; 67 சாலை. இளந்திரையன், எம்.ஏ. எம். லிட், புதிய தில்லி-5. 68 செ. வெற்றிவேந்தன் (செயராமன்) நீலமலைத்தோட்டம்-இராசிபுரம்; 69. முல்லைவாணன், சிங்கை; 70 ந. இராசகோபாலன், தஞ்சாவூர்–1.

71 அகத்தி கிருட்டிணன், இ. அ. (வேளாண்) சோளிங்கபுரம் 72 ஏ. கே. மணி, பி. இ, ஏ. எசு. எசு–1. பெங்களூர் 28 73 வே. ஐயனப்பிள்ளை, வேம்பனூர்; 74 வ. கௌரிநாதன், திருச்சி-14 75 எழிலரசன், திருச்சி-14 76 பொன்-தங்கவேலன், பெங்களூர்-15 77 தி. எழிலரசன், (இரமணி, மதுரை-3) 78 பொன்-மாறன், (இராமகிருட்டிணன்), மதுரை-3. 79 மறை-நித்தலின்பன், கோவை 80 தமிழ்க்கூத்தன், கருந்திட்டைக்குடி.

81 புலவர் ச. தமிழ்வேலன், மீனாட்சிபுரம். 82 அ. இளங்கோ பி. எசி. பி. டி. பெருமாம்பாளையம் 83 புலவர். த. மாணிக்கம், கூகலூர் 84 புலவர் திரு. மாரி. விசுவநாதன், வால்பாறை 85 பா. வளன்அரசு, க. மு. திருநெல்வேலி-2 86 கரு. பேச்சிமுத்து, திருச்சி 14 87 அ. சாமிக்கண்ணு, அரூர் 88 கே. அரசு பெங்களூர்-21; 89 ந. சுப்பையா, அருமடல்; 90 த. சுப்பிரமணியன், செட்டிக்குளம்.

91 த. வையாபுரி, ஆனைமலை; 92 எசு. கே. எசு. காதர், அம்பாலா; 93 இர. சு. கிருட்டிணன், கீழ்த்தென்குலம்; 94 அ. மீ. இராமமூர்த்தி, திருவாரூர். 95. வை. வேதையன். திருவாரூர். 96. த. சரவணத்தமிழன், திருவாரூர். 97. மா.இறைவன், திருச்சி-14. 98. த. அன்பழகன், கடலூர்-1. 99. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி. 100. பெ. அன்னகாமு, கெ. கல்லுப்பட்டி.

101 க. நாராயணன், பெகும்பகல்லாக்குடியிருப்பு; 102 வி. இராசமாணிக்கம், எம். ஏ. கோயமுத்தூர் 18; 103 மு. கதிரவன் நெமலி; 104 அ. கிருட்டிணசாமி, பெங்களூர் 21; 105 துரை–

தெட்சிணுமூர்த்தி, மேலச்செம்மங்குடி; 106 க. சிவானந்தன், திருமலைராயன்பட்டினம்; 107 அரங்க-திருமாறன், புதூர், உரத்த நாடு; 108 க. அன்புமணி, திருச்சி 15; 109 கரி. நடவரசன், நெய்வேலி 3; 110 இரா. தமிழன்பன், வேப்பங்குறிச்சி.

111 ப. துரையரசன், கைகாட்டிப்புதூர்; 112 கோ. நிலவழகன், க. மு. சென்னை 30; 113 க. சி. அகமுடைநம்பி, பி. இ, மதுரை; 114 சு. வலங்கைப்பாண்டியன் மதுரை; 115 சி. குமாரசாமி, எல். எம். இ., மதுரை 116 பொன்-இராமானுசம், சுத்தமல்லி; 117 நெல்லை சு. மணியன், திருச்சி 2; 118 முத்து-செல்வன், அலதூர்; 119 ஆ. ப. தொல்காப்பியன், மொ. ஆலமரத்துப்பட்டி; 120 இரா. தங்கராசன், மாரம்பாடி.

122 ப. பெரியசாமி, விருதுநகர்; 122 பழங்கரைவேள். பழங்கரை; 123 30-ஆம் அணி இந்திய வான்படைத்தமிழன்பர்கள், 124 உ.த.க. பெங்களூர் நகரக்கிளை; 125 செ. தென்னவன், கவுண்டன் பாளையம்; 126 காரை-இறையடியான், காரைக்கால்; 127 காரை-அலீம், காரைக்கால்; 128 தே. நே. சித்திரச்செல்வி, ஆரூர் 129 புலவர் இ. தேவநேயச்சித்திரன், கீ. அ. செங்கழுநீர்ப்பட்டு. 130 வே. மு. பொதியவெற்பன், செங்கழுநீர்ப்பட்டு.

131 ந. அரணமுறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். 132 த. முத்துக்குமரன், க. இ. பாம்பூர்; 133 ஆர். வேணுகோபால், புதுவை-1; 134 இரா. செயராமன், நெய்வேலி 2 135 திருவாட்டி வேளாங்கண்ணி உரோசுமரி, தி. அத்திப்பாக்கம்; 136 தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி 1; 137 மு. இளம்பரிதி, உரத்தநாடு; 138 ப. இளம்வழுதி, உரத்தநாடு. 139 ந. இளமுருகன் அறி. இ. ஆ. ப. நீடாமங்கலம்; 140 பி. என். அப்பாசி கவுண்டர், காளிங்கராயன்புதூர்.

141 சிங்கை-செங்கோடன், அம்மாப்பேட்டை, தஞ்சை; 142 இரா. தமிழ்வாணன், நாயனூர்பாளையம்; 143 அ. தங்கராசன், ஈப்போ, மலேசியா; 144 கு. அண்டிரன், நாயனூர்பாளையம் [தெ. ஆ] 145 ப. தாயம்மாள் அறவாணன், சென்னை 29; 146 ச. பாண்டியன், ஈப்போ, மலேசியா; 147 பெ. புதுமைப்பிரியன், மலாக்கா; 148 புலவர் ஞா. நன்முல்லை, விரியூர்; [தெ ஆ] 149 இரா. வெற்றியரசு, நெய்வேலி 1; 150 ப. நன்முல்லை, சிங்கை.

151 இரா.அருட்குவை, நெய்வேலி 3; 152 திருமலை. குமணன், சிங்கை; 153 இ. எசு. சி. மூர்த்தி, பெங்களூர் 16; 154 துரை அருண்மொழி, நெய்வேலி 1; 155 செ. மேதலைவன், நெய்வேலி 3

156 த. செகந்நாதன், அம்பலாப்படைவீடு; 157 இறைவாணன் சிங்கப்பூர்; 158 ப. தண்டபானி, கான்பூர்; 159 சே. கணபதி, மலேசியா; 160 புலவர்-குமர. தன்னெளியன், கண்ணமங்கலம், (வட ஆ. மாவட்டம்)

151 ஏ. செல்வராசு, கான்பூர் 8; 162 செந்தமிழ்ச்சேய், பொறி இ. அரசூர், தெ. ஆ. மாவட்டம்; 163. உடுமலைப்பேட்டை அன்பர்கள் அமைப்பாளர் கி. சீதாராமகுப்தா; 164. ம. துரைசாமி. பீடோங்-மலேசியா; 165 எம். ஏ. இளஞ்செல்வன், (எம். இராமு) பீடோங்-மலேசியா; 166 பெ.அரசு, மலாக்கா; 167 இரா. காளிமுத்து கோலாலம்பூர்; 168 மருத்துவர் சி. இராமச்சந்திரன், சேலம்; 169 பி. இலக்குவன், குவைத்து; 170 புலவர் கா. சு. சண்முகம், பல்லடம்.

171 புலவர் ப. சுப்பையன், நாச்சிப்பாளையம், திருப்பூர்; 172 புலவர் திருமேனி, நாகராசன். காரைக்கால்; 173 காரை-அறவாழி, காரைக்கால்; 174 மு. துரைச்சாமி, க. மா. அ. சுலுத்தான்பேட்டை, பல்லடம்; 175 க. தமிழப்பன், அ. அரங்கசாமி, திருப்பூர் 2; 176 சி. அறிவுறுவோன், அம்மையகரம்; 177 திருவாட்டி இராசேசுவரி செந்தில், அம்பாலா; 178 கல்லூர் மணியம். மலாக்கா, 179 பறம்பை. தென்னவன், பறம்புக்குடி. 180 பொ. பொன்னரசன், க. இ. மேலூர்.

181 அர. இராசேந்திரன், க. இ. குளத்துப்பாளையம், பல்லடம் 182 அதியமான், சா. முருகு, ஆசிரியர், அதியமான்குப்பம், திருமுதுகுன்றம். 183 மூ. பொய்யாமொழி, காட்டுக்கூடலூர். (தெ. ஆ) 184 துரை—வேழவேந்தன், காட்டுக்கூடலூர். (தெஆ) 185 சி. இராசாங்கம், அறி. இளை. தஞ்சாவூர். 186 கு. பெருந்துரை, அதியமான்குப்பம். திருமுதுகுன்றம். 187 பொன். பகலவன், நெய்வேலி 3; 188 கோ. கண்ணன், நெய்வேலி 3; 189 பொன்—தமிழ்முல்லை, சிங்கப்பூர்-2; 190. கோவை மாவட்டத்தார்.

191 பா. சு. மணியன், சில்லாங்கு-9; 192 கோ. சாந்தாலிங்கம், சில்லாங்கு-9; 193 வி. இராமாநுசம், பொறி. இ. நெய்வேலி-1; 194 இரா. ஆறுமுகன், பு. புளியம்பட்டி; 195 மா. கவிச்செல்ல நடராசன், C/o 56. A. P. O; 196 இரா. விசுவநாதன், க. இ. (வணிகம்) தஞ்சாவூர். 197. அன்பு. ந. வை. இளஞ்செழியன், அம்மையன்பட்டி. [தஞ்சை] 198. புலவர் ஒ அரசு, குன்றூர்-2. 0

பாவேந்தரும் ஓவியரும்

சி. சத்தியமூர்த்தி கீ. க. மு.,

கீழ்க்காணும் இப்பாடல் ஈழத்து ஓவியர் ச. பெனடிக்ட் அவர்களைப் பாவேந்தர் பாடியது. பாவலரைக் கண்டு புனையா ஓவியம் (Sketch) வரைய ஓவியர் அவர் இல்லத்திற்குச் சென்றார். தம்மை வரைய ஈழத்திலிருந்து வந்த ஓவியருக்குப் பாவலரும் இசைவு தந்தார்; அசையாமல் காட்சி[Pose]கொடுத்தார். ஐந்தே மணித்துளியில் ஓவியத்தை உருவாக்கிப் பாவேந்தர் முன் வைத்தார் ஓவியர். அதைக் கண்ட பாவலர் உள்ளத்தில் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. "உமக்கு இவ்வளவு விரைவில் வரைய முடியுமானால், எனக்கும் அவ்வளவு விரைவில் பாடத் தெரியும்" என்று பாவேந்தர் தமக்கே உரிய தமிழ்ச் செருக்குடன் கூறி மிக விரைவில் இப்பாடலைப்பாடி ஓவியருக்குப் பரிசிலாக அளித்தாராம். இச்செய்தியை உணர்வு வேகத்துடன் ஓவியர் எனக்கு நேரில் கூறினார். ஓவியர் இன்று

யாழ்ப்பாணத்தில் வணிக ஓவிய நிலைய உரிமையாளராக இருக்கிறார். அவர் எழுதிய பாவேந்தரின் புனையா ஓவியம் 1957 'குழுதம்' இதழ் ஒன்றில் வெளிவந்ததாம். ஓவியம் எழுதுமுன் பாவேந்தருக்கும் ஓவியருக்கும் இடையே உரையாடல்கள் நிகழ்ந்தன. அத்துடன் பாவேந்தரின் இசைப்பாடல் ஒன்றை ஓவியர் இசையுடன் பாடினார். அதனைக் கேட்டுப் பாவேந்தர் நல்லின்பக் கேணியில் குளித்த செய்தி பாட்டில் வரு

கிறது. இது வரை வெளிவராத இப்பாடல் பாவேந்தர் ஓவியருக்கு அளித்த சான்றிதழ் போல் காணப்பட்டாலும் பாவேந்தரின் ஈடிணை யற்ற பாட்டுத்திறத்தைக் காட்டி நிற்கிறது. ஒரு கலைஞர் இன்னொரு கலைஞரை உள்ளந் திறந்து பாராட்டும் பாராட்டு, என்றும் இவ்வுலகு பின்பற்றக் கூடிய ஒன்று. இப்பாடலைப் பாரதியார் பாடிய 'ஓவியர் மணி இரவிவர்மா' என்ற பாடலுடன் ஒப்பு நோக்கி மகிழலாம்.

என்னை நான் இனிது கண்டு வியந்தேன்!
கண்ணாடி யிலன்று; கருநிழல் படத்தில்
அன்று; பலர் புகழ் இன்ப ஓவியப்
புலவன் பெனடிக்ட் எழுதுகோல் புனைந்த
நிலவு வெண்படந் தன்னில் நலமுடன்
என்னை நான் இனிது கண்டு வியந்தேன்.

என்னைநான் எதிரில் காண எழுதிய
வன்மைப் பெனடிக்ட் தன்னை நானும்
பார்த்தேன். அன்னோன் பருவுட லினையும்
பாரளவு விரிந்த உள்ளப் பரப்பையும்
ஓவியத் தாலதை உரைத்திலன் ஆயினும்
பாவின் திறத்தால் பகரு கின்றேன்;
இன்றைக் கெல்லாம் கேட்பினும் இனிப்புக்
குன்றாத் தமிழில் அன்பு குழைந்த
பேச்சினில் பெனடிக்ட் பிறர்நலத் தவாவின்
வீச்சினைக் கண்டு வியந்துளேன் பன்முறை;
நாட்டு நலத்தை நல்லிசை கூட்டிப்
பாட்டுப் பாடினன் ஒருமுறை. நானதைக்
கேட்டு நல்லின்பக் கேணியிற் குளித்தேன்;
பைந்தமிழ் இலக்கியச் சோலையிற் பறித்த
செந்தேன் மலர்சில என்முன் சேர்த்தான்.
தமிழறிவு கண்டுநான் அமிழ்திற் குளித்தேன்;
பயனுறு மகன்இப் பாருக்குப் பெனடிக்ட்.

அந்தப் பெரியோன் அரிய உள்ளம்
கலைவாழ் வுதனில் உலகைச் சேர்த்து
நல்லதோர் அமைதியை நாட்டலாம் என்பதாம்.

இவ்வருந் தொண்டினை இலங்கையில் தொடங்கி
இலங்கையின் குருதியோ டிணைந்த தான
நாவலம் பொழில்வரை நன்றூற்றி யுள்ளான்
அயல்நாடு களெல்லாம் அக்கலை வல்லனை
அழைத்திடும் என்பதை இன்றுநா னறிவேன்
தழைத்திட வேண்டும் அன்னோன் தனிப்புகழ்!
அறிஞன் பெனடிக்ட் ஆர்வம்
நிறைவு பெறுக நீடுவா ழியவே. பாரதிதாசன்

புதுவை, 2—5—57



"அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ—முச்சில்
புடைத்துலேயில் இட்ட புதுமணலேச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!"

பட்டறையிலே பாரதிதாசன்

ஆசிரியர்: பர் திரு. தா. வே. வீராசாமி, க. மு.,

கிடைக்குமிடம்: 'மெர்க்குரி' புத்தகக் குழுமம்,
கோயமுத்தூர்-1,

விலே: உருபா: 3—00

திறனுய்வு என்னும் பெயரில் வெளிவரும் தமிழ்நூல்களெல்லாம் பெரும்பாலும் நூலாசிரியர் புகழ்பாடுவனவாகவே இருக்கின்றன. ஆனுல் 'பட்டறையிலே பாரதிதாசன்' என்ற இச்சிறுநூல்உண்மையாகவே ஒரு திறனுய்வு நூலாகத் திகழ்கிறது.

திறனுய்வாளர் ஆயுங்கால் தாம் காணும் நிறைகளேக் குறிப்பிடுமாப் போல் குறைகளேயும் தயங்காது எடுத்துக் காட்டல் வேண்டும். அவர் காணும் குறை, உண்மையிலேயே குறைபாடுதாஞ என்பது வேறு செய்தி. ஒருவர்க்குக் குறையாகத் தோன்றுவது மற்ருெருவர்க்கு நிறையாகத் தோன்றலாம். அப்போது மற்றவர் அஃது எப்படி நிறை என்பதை நிறுவ முயலுவார். திறனுய்வுத்துறை வளரும்.

அந்த வகையில் நூலாசிரியர் பாவேந்தர் படைப்புகளில் தாம் கண்ட குறைபாடுகளேத் தவருது கூறுவது வரவேற்கத்தக்கதாகும். காட்டாகப் 'பாரதிதாசன் நாடகங்களில் முதற்காட்சிக் குறிப்புகள்' என்ற கட்டுரையில் 'மேக்பெத்தின் முதற்காட்சியும் சிறிதாகவே உள்ளது. எனினும் நாடக நுணுக்கம் வாய்ந்தது. ஆனுல், 'காதல் வாழ்'வோ அளவால் சுருங்கியது. தவிர நுணுக்

கம் பெறவில்லை', (பக்கம் 90) என்று குறிப்பிடுகிறார். மேலும் பல குறை நிறைகளைச் சுட்டிக்காட்டி 'இங்ஙனம் பாரதிதாசன் நாடகங்களில் முதற்காட்சியில், அளவு, காலம், அமைப்பு ஆகியவற்றில் குறைகள் இருப்பினும் அவை பாவேந்தரின் நாடகப் பெற்றியைப் பெரிதும் தாக்கவில்லை," என்று முத்தாய்ப்பு வைக்கிறார். மேலும் பாவேந்தரின் 'பிசிராந்தையார்' நாடகத்தில் 5-மணி என்று காலம் குறித்திருப்பதைச் சுட்டிக் காட்டிப் 'பாவேந்தர் தம் காலத்தின் செல்வாக்கை இங்கே புகுத்திய 'வழு' வெளிப்படையாகப் புலப்படுகின்றது என்று கூறிச் செல்கிறார்.

ஆசிரியர் பாவேந்தரின் கண்ணுகர் நாடகங்களையும், செவிநுகர் நாடகங்களையும் தனித்தனியாக ஆய்வது சிறப்பாக இருக்கிறது. அடுத்த சிறப்பாக, ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் ஆசிரியர் தாம் தெளிந்த முடிவை முடிந்த முடிபாக அறுதியிட்டுக் கூறலைச் சொல்லலாம். காட்டாகப் 'பாண்டியன் பரிசில் செயல் வீச்சு' என்ற கட்டுரையில் "இங்ஙனம் பாண்டியன் பரிசில் காணும் கதைமாந்தர்களின் பண்பமைப்பைக் காட்டிலும் செயலாற்றலின் அமைப்பே விஞ்சுவதை உணர்கிறோம்' என்றும், 'பிசிராந்தையார்' என்ற கட்டுரையின் இறுதியில் "இங்ஙனம் நிகழ்ச்சிச் சூழலில் பெரிதும் மனம் செலுத்தாமல் உணர்ச்சிகளின் வடிவிலேயே 'பிசிராந்தையார்' விளங்கி நிற்கிறது எனலாம்" என்றும் கூறிச் செல்கிறார்.

'சேர தாண்டவம் - ஓர் ஒப்பீடு' என்ற கட்டுரையில் "கதைமாந்தர்தம் இல்லறத்தை அன்பின் விளைச்சலாகக் காட்டுகின்றார் பாவேந்தர் எனக் கொண்டால் அதனையே பின் வரப்போகும் நிகழ்ச்சியைக் குறிப்பாக உணர்த்துதற்குப் பயன்படுத்துகிறார் தூரன். முன்னது நாடகத்தில் செயற்கைப் பண்பைக் கலந்ததன் விளைவு. பின்னது நாடகத்தில் நாடகப் பண்பைக் கலந்ததன் விளைவு" என்று குறிப்பிடுகின்றார். அது செயற்கைப் பண்பு என்பதை ஆசிரியர் எதைக் கொண்டு முடிவு கட்டுகிறார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆதி சோழ இளவரசியானாலும் கணவனாகிய அத்திக்கு இல்லறத்தில் பணிப்பெண் போல் பணி செய்வது செயற்கையாகவா இருக்கிறது?

முதற் கட்டுரை 'குடும்ப விளக்கு—குறளோவியத்தில், 'எப்போது தமிழனுக்குக் கையாலான நமதுழைப்பை - ஒரு காசைச் செலவு செய்தோம்' என்ற தலைவியின் வினவும் அதற்குரிய தலைவனின் விடையும், 'குடும்ப விளக்கின் தமிழ் ஒளி' என்ற மூன்றாவது கட்டுரையிலும் வருகிறது. இப்படி இன்னும் சில தென்படுகின்றன. ஆசிரியர் முன்னுரையில் குறிப்பிடுமாறு போலக் கட்டுரைகள் பல்வேறு சமயத்தில் பல்வேறு இதழ்களில் வெளிவந்தவை. என்றாலும் அவற்றைத் தொகுத்து ஒரு பெயரிட்டு நூலாக வெளியிடும்போது கூறியது கூறலாக உள்ள இடங்களைத் தவிர்த்திருக்கலாம்.

அழகின் சிரிப்பைப் புதுமையான நோக்கில் சுவைத்திருப்பது பாராட்டத்தக்கது. நூல் முழுவதும் நல்ல தமிழ் மணந்தாலும் 'உன்னத', 'அனுபவ', 'கரம்,' 'கவிஞர்' போலும் வட சொற்களை நுழைத்து நடையில் ஓர் இழுக்கேற்படுத்தியதைத் தவிர்த்திருக்கலாம். 'சட்டர்ஜி' 'பெர்னாட்ஷா', ஷேக்ஸ்பியர்', போன்ற பெயர்களையும் தமிழ்மரபுக்கேற்ப வடவெழுத்தை நீக்கிக் கையாண்டிருக்கலாமே! 'ஓறா' (பக். 108) 'வைகயும்' (பக். 112) என்பன போன்ற அச்சுப் பிழைகள் அருகியே காணப்பெறுகின்றன.

இப்படி ஒரு சில குறைபாடுகளைத் தவிர்த்துவிட்டுப் பார்ப்போமாயின் 'பட்டறையிலே பாரதிதாசன்' சிறந்ததொரு திறனாய்வு நூலாக மின்னிப் பொலிகிறது.

—குமரன்

நினைவில் வையுங்கள்

தனித்தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடு

பூஞ்சோலை

இன்றே உறுப்பினராகுங்கள்

ஆசிரியர்: காரை—இறையடியான், காரை—அழகன்

ஆண்டுக் கட்டணம் 5 உருபா. தனிஇதழ் விலை 40 காசு.

பூஞ்சோலை, காரைக்கால்-1

அன்பும் அறிவும்

-மெய்ம்மைப்பித்தன்

உலகில் மிச்சப்படுவன இரண்டு;
அன்பும் அறிவும்!
இறைவடிவாகக் காணப்பெறும் இரண்டு தன்மைகளும் இவையே!
நம்மிடம் சில பொழுது உள்ளன போலவும்,
சிலபொழுது இல்லாதன போலவும்
இருப்பன அன்பும் அறிவுமே!

அன்பு பரந்து செல்வது!
அறிவு உயர்ந்து செல்வது!
உயிரின் அகலம் அன்பு!
உயிரின் உயரம் அறிவு!
அதன் பரப்பளவு அன்பறிவும்; அறிவன்பும்!
உயிர் உடலோடு பொருந்திய பின் அதற்குப் பருமனும் உண்டு;
அது பண்பு!
பண்பட்டதே பண்பு!
அகலம், உயரம், பருமன்–இம்மூன்றனுள் ஒன்றுமிகுந்தும் ஒன்று
குறைந்தும், ஒன்று அறவே பழுது பட்டும், மூன்றும் சிறந்தும்
விளங்கும் உயிர்களும் உண்டு!

அன்பு நீரும்; அறிவு நெருப்புமாகும்!
பண்பென்பது நிலம் போன்றது!
உயிரென்ற பயிர் பண்பென்னும் நிலத்தில் பற்றியிருந்து,
அன்பு நீராலும், அறிவுச் சூட்டாலும் வளர்ந்து பிறர்க்குப்
பயன் நல்குதல் வேண்டும்!

நல்ல நிலத்தில் நல்ல விளைவுள்ளது போல்,
பண்பு நிலத்து வேரூன்றிய மாந்த வாழ்வுதான் பிறர்க்குப்
பயனுள்ளதாகும்!
களர் நிலத்து நல்விளைவில்லை;
முள்ளும் கள்ளியும் முளைத்துக் கிடக்கும்!
அவற்றிற்கும் அன்புண்டு; அறிவும் உண்டு!
ஆனால் அவை நன்னிலத்துப் பயிர் போல் பொதுவில்
பயன் பெறுவது இல்லை!

அன்பு பெண்! அறிவு ஆண்!
பண்பென்பது இருவரையும் இணைவித்து
உலகை இயக்கும் மேடையாக நின்று பயன் பெறுகின்றது!
பெண் அன்புத் தன்மையால் உயிர்களைப் பரவச் செய்கின்றாள்!
ஆண் அறிவுத் தன்மையால் உயிர்களை உயரச் செய்கின்றான்!
இவ்விரண்டினுள் ஒன்றில்லாதவிடத்து மற்றொன்று பயன் தருவதில்லை.
பருமனைத்தரும் பண்பில்லாதவிடத்து இவ்விரண்டும் பயன் தருவதில்லை.
ஒரு பொருளுக்கு வேண்டிய அகலம், உயரம், கனம் ஆகிய
முப்பரிமாணத் தன்மை போல், உயிருக்கு இம் முப்பரிமாணங்களும்
கட்டாயம் தேவை என்று இயற்கை கட்டியங்கூறி நிற்கின்றது!

அன்பு குளிர்ச்சி; அறிவு சூடு!
பண்பு உயிர் விளைவு! உலக வியக்கம்!
அன்பும் அறிவும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து,
ஒன்றின் ஒன்று குறையாதவாறும், கூடாதவாறும்
இணைந்து நின்று பண்பாள்வதே வாழ்க்கை!
அன்பு மிகின் உயிர்கள் மடம்பட்டு இயக்கம் நிலைபெறும்!
அறிவு மிகின் உயிர்கள் அழிவு நோக்கிச் சீர்குலையும்!
இவ்விரண்டையும் நிலை குலையாதவாறு அணைத்து நின்று சமப்படுத்தலே
பண்பின் இயக்கமாம்!

பறவைக்கும் விலங்குக்கும் அன்புண்டு; அறிவுண்டு; பண்பும்உண்டு!
மாந்தவினத்தில் இம் மூத்தன்மைகளும் மேலோங்கி நிற்கக் காணலாம்!
அன்பு ஆக்கத் தொழிலும்,
அறிவு அழித்தல் தொழிலும்,
பண்பு காத்தற் தொழிலும் செய்யும்!
இம்மூன்றையும் முத்தெய்வ வடிவங்களாக மாந்தர் கண்டனர்!

அன்பின் விளக்கமே பெண்மையும் தாய்மையும்!
அதுவே அகம்!
அறிவின் விளக்கமே ஆண்மையும் ஆளுமையும்!
அதுவே புறம்!

பண்பின் விளக்கமே குடிமையும் பொதுமையும்!
அதுவே அகப்புறம்!
அன்பும் அறிவும் இணைவது அறம்!
அறிவும் பண்பும் இணைவது பொருள்!
அன்பும் பண்பும் இணைவது இன்பம்!
அன்பும் அறிவும் பண்பும் இணைவது மீமிசை மாந்தம்!
அதுவே இறைமை!
அதுவே வீடு!

அன்பும் அறிவும் பிரிவது மறம்!
அறிவும் பண்பும் பிரிவது இருள்!
அன்பும் பண்பும் பிரிவது துன்பம்!
அன்பும் அறிவும் பண்பும் ஒன்று விட்டு ஒன்று பிரிவுறுவது விலங்கம்
அதுவே பேய்மை!
அதுவே நிரையம்!

0

---

* 'பாவை' என்னும் பெயரில் மீண்டும் நடையிடவிருந்த இதழ் 'வலம்புரி' என்னும் பெயரில் வெற்றி முழக்கமிடவுள்ளது.

* முதல் இதழ் மொழி ஞாயிறு பாவாணர் அவர்களின் பிறந்த நாட் சிறப்பிதழாக வெளி வருகின்றது.

"வலம்புரி"

ஆசிரியர்

புலவர் இறைக்குருவனார்

0 தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் அளிக்க வரும் செந்தமிழ்த் தாளிகை.

0 'பாவை" உறுப்பினர்கட்குத் தொடர்ந்து இதழ்கள் விடுக்கப் பெறும்.

தனியிதழ் 0-25 காசு ஆண்டுக்கட்டணம் 3 உருபா

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.

வலம்புரி

(திங்களிதழ்)

மதுரை-10.

தொடர்: 2

தொல்காப்பிய வளம்

—புலவர் இறைக்குருவனார்

தொல்காப்பியம் ஆயிரத்து அறுநூற்றுப் பத்து நூற்பாக்களால் யாக்கப்பெற்ற பெருநூல். அஃது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் முப்பெரும் பிரிவுகளாகவும், ஒவ்வோர் அதிகாரத்திற்கும் தொண்டு (ஒன்பது) இயல்கள் மேனி இருபத்தேழு சிறு பிரிவுகளாகவும் பாகுபடுத்தி அமைக்கப் பெற்றுள்ளது.

எழுத்ததிகாரம்

எழுத்தினை உணர்த்துதற்கு அதிகரித்த இயல்களின் தொகுதி எழுத்ததிகாரம் எனப்பெற்றது. †இதன்கண் [1]நூன்மரபு, [2]மொழிமரபு, [3]பிறப்பியல், [4]புணரியல், [5]தொகைமரபு, [6]உருபியல், [7]உயிர்மயங்கியல், [8]புள்ளிமயங்கியல், [9]குற்றியலுகரப் புணரியல், எனும் தொண்டு இயல்கள் உள்ளன. இவற்றுள் நூன்மரபு முதலாகப் புணரியல் ஈறாக உள்ள நான்கியலும் **கருவி** எனவும் தொகைமரபு முதலாகக் குற்றியலுகரப் புணரியல் ஈறாக உள்ள ஐந்து இயல்களும் **செய்கை** என்றும் வழங்கப் பெறுகின்றன. *இவ்வதிகாரத்துள் நானூற்றெண்பத்து மூன்று நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

நூன்மரபு

நூன்மரபாவது நூலின்கண் வழங்கப்பெறும் எழுத்தினது இலக்கணம். உயிர், மெய், அன்பு முதலிய பெயர்கள் வழங்கி வரும் பெயர்கள் போலாது நூலின்கண் எழுத்துக்குரியவாக

---

† நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகை மரபு—பாலாம்
உருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கந்
தெரிவரிய குற்றுகரஞ் செப்பு.

* எழுத்ததி காரத்துச் சூத்திரங்க ளெல்லாம்
ஒழுக்கிய ஒன்பதோத் துள்ளும் - வழுக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்று நாவலர்கள்
மேனூற்று வைத்தார் விரித்து.

(தொல்-எழுத்து-நச்-உரை)

வரையறைப்படுத்து வழங்கப்பெறுகின்றன. அவற்றையும், அவற்றின் இலக்கணங்களையும் அறிந்து கொள்ளல் இன்றியமையா முதன்மை வாய்ந்தது. ஆதலின் இந் நூன்மரபினை நூலின் நுழைமுகமாக அமைத்துள்ளார் ஆசிரியர்.

எழுத்து

எழுத்தெனப் படுப
அகர முத
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே.

மேல் எழுத்ததிகாரம் என்று வகுத்துக் கொண்டமையால் எழுத்தாவது யாது என வினா நிகழுமாதலின், எழுத்து என்னும் பொதுப்பெயரால் இங்குச் சுட்டப்பெறுவன இவை என வரையறுத்து உணர்த்துதற்கு இந் நூற்பா முன்னெழுந்தது.

பொழிப்பு:- எழுத்து என்று சிறப்பித்துக் கூறப் பெறுவன அகரத்தை முதலாகவும் னகரத்தை இறுதியாகவும் கொண்ட முப்ப::தும் என்று கூறுவர் நூலோர்; [இங்ஙனம் கூறுவது] ஒரு மொழியைச் சார்ந்து வருதலையே தமக்கு இலக்கணமாக உடைய மூன்றும் அல்லாத விடத்தேயாம்.

குறிப்பு:- ஒலியம் முதலியனவும் எழுத்தென்றே வழங்கப் பெறுதலின் அவற்றினின்றும் வேறு பிரித்தற் பொருட்டு எழுத்தென்று அமையாது **எனப்படுப** என்றார். தொன்று தொட்டு வழங்கி வருதல் பற்றி **என்ப** என்றார். முப்ப::தும் என்பதன்கண் முற்றும்மை தொக்கு **முப்ப::து** என நின்றது.

அகர முதல் முப்ப::தும் எனினும் அமையும். ஆயினும் உயிரும் மெய்யும் என்னும் இருபெருங் கூறுதலை ஓராற்றான் இங்கேயே புலப் படுத்துபவாராய் **அகரமுத னகர விறுவாய் முப்ப:: தென்ப** என்றார். அகர முதல் உயிரும் னகர இறுவாய் மெய்யும் என்பது பெறப்படும். **சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே** என்றமையால் அம்மரபின உள என்பதும், அவைதாமும் மூன்றேயாம் என்பதும், அவை மேற் கூறிய முப்பதும் போல் சிறப்பில வென்பதும் அம் மூன்றனையும் கூட்ட எழுத்து முப்பத்து மூன்று என்றும் கொள்ளலாம் என்பதும் விளங்கும்.

[தொடரும்]

மக்களவை

0: 130 அடியாத மாடு... !

குமுகாயச் சீர்திருத்தம் என்பது ஓர் எளிய செயல் அன்று. அது தலைகீழ் மாற்றம். அத்தகு மாற்றத்தினைப் பேச்சும் எழுத்தும் ஏற்படுத்தி விடும் என நம்பினால் எஞ்சுவது ஏமாற்றமாகத் தான் இருக்கும். நமது நிலத்தில் இன்று விளைந்திருப்பது கள்ளியும் காளானுமே. இவற்றைச் சல்லி வேரோடு கெல்லி எறியாமல் 'புதுமை'யினை இங்குப் பயிர் செய்தல் என்பது இயலா ஒன்று.

பேச்சும் எழுத்தும் இங்கு முளைத்து இருப்பவற்றின் தன்மையை உணர்த்த மட்டுமே உதவும். 'உழைப்பு' ஒன்றினால் மட்டுமே புதுமை மலர்ந்திட முடியும். அந்த உழைப்பு துணிவு மிக்கதாய் இருத்தல் வேண்டும். அது தனி ஒரு மாந்தனின் உழைப்பன்று. திண்தோள் கொண்ட மறவர் கூட்டத்தின் ஒருமித்த உழைப்பாய் இருக்கவேண்டும். இந்த உழைப்பிற்குப் 'புரட்சி என்ற மற்றொரு பெயரும் உண்டு.

வரலாறு காட்டும் வழியினைப் பாருங்கள். சாக்ரடீசு ஒரு சீர்திருத்தக்காரர். அவரைக் கிரேக்கம் நஞ்சு கொண்டு அழித்தது. இயேசு ஒரு சீர்திருத்தக்காரர். உரோமானியம் அவரைக் குறுக்கத்தில் (சிலுவையில்) அறைந்தது. ஆனால் மகமது நபியோ தமது சீர்திருத்தங்களைத் தமது காலத்திலேயே பரப்பிவிட்டுத் தமது மனைவியாரின்மடியில் தலை வைத்தபடியே கண் மூடினார். அதன் கரணியம் அவர் திரட்டிய படையின் வலிவே! இயேசுவின் கொள்கைகள் அரசின் துணை பெற்ற பின்பே, இருநூறு ஆண்டுகளுக்குப்பின் பரவத் தொடங்கியது. ஆனால் படை வலிவு கொண்ட நபிகளின் கருத்தோ இருபதே ஆண்டுகளில் பரவி விட்டது.

பெண்களின் முகத்திரையையும், ஆண்களின் தொப்பியையும், அகற்றும் வலிவு துருக்கியத் தந்தை கமால்பாட்சாவிற்கு இருந்தது எனில், அஃது அவரது படையின் வலிவே! மாவோவின் வலிவே அவரது செங்காவல் படைதான் என்பதை உலகறியும். துமுக்கி (துப்பாக்கி)யின் முனையிலேதான் உருசியா உருமாற்றப் பட்டது. உலகறிந்த இவ்வுண்மைகளை அறிந்த பின்னும் நாம்

எழுத்தையும் பேச்சையும் மட்டுமே நம்பி இருப்பதனைப் போன்ற ஏமாளித்தனம் வேறெதுவும் இருந்திட முடியாது.

நமது தாளிகைகள் கேடயமாக வேண்டுமானால் இருக்கலாம் ஆனால் அவற்றையே 'வாள்' என எண்ணக் கூடாது. வாள், வாளாக இருக்கும் போது தான் வெற்றி நமதாக இருக்கமுடியும்.

'பிறப்பொக்கும்' என்ற வள்ளுவன், 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற ஔவை, 'சாதியாவது ஏதடா' என்ற சிவாக்கியன் போன்ற எண்ணற்ற சீர்த்திருத்திகள் இத்தமிழ் நிலத்தில் தோன்றி மறைந்து விட்டனர்.

தந்தை பெரியாரும் 'இந்நாடு முன்னேறி விட்டது என்பது எப்படி உண்மையாகும்? என என்னை நானே கேட்டுக் கொள்ள வேண்டியவனாய் உள்ளேன்' என்று எழுதும் அளவிற்குச் சலித்துப் போய் உள்ளார். தமிழ் நிலத்துச் சீர்திருத்திகள் அனைவருமே தமிழர்கள் தாங்களாகவே திருந்துவர் என நம்பினர். அந்த நம்பிக்கை வீண்போய் விட்டது. தமிழ் நிலம் திருந்தாது. அது திருத்தப்படல் வேண்டும். இது தானாக மாறாது மாற்றப்படல் வேண்டும்,

உலகத் தமிழ்க் கழகத்து நண்பர்களே! நான் உங்களைக் கேட்கிறேன்! நெஞ்சைத் தொட்டுச் சொல்லிக் கொள்ளுங்கள்! உங்களில் எத்தனைப் பேர் கலப்புத்திருமணம் செய்து கொண்டுள்ளீர்கள்? அல்லது செய்யப் போகிறீர்கள்...... உப்பில்லாமல் உங்கள் அன்னை செய்யும் உணவை இரக்கமின்றி ஒதுக்குகின்ற நீங்கள், 'சாதி' என்று வரும்போது, தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை, தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை' எனச் சொல்லப் போகின்றீர்கள்!

ஆமாம் நண்பர்களே! இத்தமிழ் நிலம் தானாகத் திருந்தாது! இது திருத்தப்படல் வேண்டும். நான் உறுதியாகக் கூறுவேன்! இங்குச் செங்குருதி ஓடாமல் செம்மை நிலை மலரப் போவதில்லை! உள்ளம் தெளிந்தவர்களே! உங்கள் உடலை வலிவாக்குங்கள்! வெல்க தமிழ்!

—முகிலன், வெங்காளூர்-6

0: 131 கருத்தும் காலமும்

அன்புள்ள ஐயா,

வணக்கம். தங்களின் 'எவன்கொல் அறிகும் இறையவன் கிடக்கை! பாடல் (பாட்டு ௩௧ நூருசிரியம்- ஓலை-6-7, சுவடி-9—

கண்ணுற்றேன். இறையவன் உண்டா. இல்லையா என்பது ஒருபுற மிருக்க, தருக்கத்திற்கேனும் இறையவன் உண்டு என்ற கண்-ஞேட்டத்துடன் நோக்கினும் இப்பாடல் 'தென்மொழி'யில் இடம் பெற்றது இக்கால் சரிதானு என்ற வினு எழுகிறது. இறைவன் என்ற ஒரு சொல்லின் அடிப்படையிலேயே தமிழர் வாழ்வும் வளமும் இருளடைந்தன என்பது நாம் கண்கூடாகக் கண்ட, காணும் காட்சி யாகும். அந்த ஒரு சொல்லை வைத்தே தமிழரை. தமிழ் நாட்டை அடிமைப் படுத்திய ஆரியக் கூட்டத்தினரை அறியாதார் யார்?

இறைவனைக் கற்பித்து இறைவன் தன்மையைக் கற்பித்து, இறைவனுக்கு மிகுதியாகச் சடங்குகளைக் கற்பித்து, சடங்குகள் நடத்திட ஒரு தனிக் கூட்டத்தையும் கற்பித்து, தனிக் கூட்டத் தினரே தனிச் சிறப்பு வாய்ந்தவரெனக் கற்பித்து, தனிச் சிறப்பு எய்திய தனிக் கூட்டம் தவிர்த்தோரெல்லாம் இம்மண்ணிலே தாழ்த்தப் பட்டோரெனக் கற்பித்து, தாழ்த்தப் பட்டோர் தனிக் கூட்டத்தாருக் கடிமையெனக் கற்பித்து, தன்னேரிலாத் தமிழகத்தை யாண்ட தமிழரைத் தனக்கடிமை யாக்கி, தமிழரின் வாழ்வில், உழைப் பில் தான் உண்டு கொழுத்து உழைப்பில்லாமல் முன்னேறிய கூட் டம் இன்னும் நம்மிடையே கோலோச்சுவது ஒடுங்கிய பாடில்லை. தந்தை பெரியார், அறிஞர் அண்ணு போன்றோரின் தீவிர கொள் கைப் பரப்புதலால். தமிழன் தற்போது தான் தன்னை இன்னுனென்று இனம் கண்டு கொள்ளத் தொடங்கியிருக்கின்ருன். இன்னும் முழு தும் விழிப்படைந்த பாடில்லை. இந்நிலையில் இறைவனின் இருக் கையைப் பற்றிய ஒவ்வோர் எழுத்தும் இந்நாட்டில் ஆரிய வேர் வலுவடைய உதவுமேயன்றி, வேறு பயன் அளிக்காது-

தாங்கள் கூறும் பேராற்றலை உள்ளத்தளவே உணருபவர் எத்தனைப்பேர் உளர்? நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக் கையில்?' என்னும் பொருள்பட எண்ணுபவர் எத்தனைப்பேர் உளர்? 'உள்ளிருக்கும் நாதனை' மட்டுமே இறைவன் என ஏற்று நடப்பவர்க் கென்ருல் தங்களின் பாடல் சரி? ஆனுல், அவ்வாறு பண்பட்ட உள்ளங்கள் எவ்வளவு உள?

இறைவன் என்றதுமே, நட்ட கல்லும் சாற்றுதற்கு நாலு 'புட்ப'மும் முணுமுணுக்க ஒரு பார்ப்பானுந்தாமே யாவர் மனத்திலும் தோன்றும். இறைவனை எண்ணியதும், ஆறு கால பூசையும், பூசை நடத்த பார்ப்பானும் தேவையென்ருகின்றது. இறைவன் பெயரால் செய்யும் கருமமனைத்திற்கும் பார்ப்பானே. இந்நிலையின் அடிப் படையில் பார்ப்பான் தனிச் சிறப்பெய்துகிருன். அவன் சொல்வ தெல்லாம் தனிச் சிறப்பெய்துகிறது. எச்செயலிலும் தனிச்சிறப் பெய்தியவன் தேவைப்படுகின்ருன் தேவையின் அடிப்படையில்

நாம் பின்னடைகிறோம். பார்ப்பான் முன்னேறுகிறான். எனவே தான் பார்ப்பான் முன்னேற, தமிழன் பின்னடைய அமையும் ஒரு கருவி இறைவன். ‘பார்ப்பானை ஒழித்தால் இறைவன் ஒழிந்து விடும். இறைவனை ஒழித்தால் பார்ப்பான் ஒழிந்து விடுவான்’ என்ற தந்தை பெரியார் அவர்களின் கூற்று எவ்வளவு உண்மை என்பது இதனால் விளங்கும். இறைவன் இல்லை என்ற முழக்கம் எவ்வளவு தான் இருந்த போதிலும், பல்துறை அறிஞர்கள் பலர், இறைவன் என்று ஒன்று உண்டு; அஃது உள்ளுணர்வு தான் என்று கூறுவது, பார்ப்பானுக்குச் சரியான பிடிப்பாக உள்ளது-தனது வாழ்வை மேலும் வளமாக்க. ஒரு நோயாளி, மருத்துவத் துறையில் வல்லுநர் என்று பலராலும் போற்றப்படுபவரிடம் செல்கின்றான். அறுவை முடிகிறது. தன் நிலைபற்றி நோயாளி கேட்கிறான்! என்னால் முடிந்ததைச் செய்து விட்டேன். — இனி அவன் தான் உன்னைக் காப்பாற்ற வேண்டும்’ என்று மருத்துவர் கூறுகிறார். மருத்துவருக்குத் தன் தொழில் மேலும் முழு நம்பிக்கையில்லை. ‘அந்த அவன் மீதும் முழு நம்பிக்கை இல்லை என்ற நிலை ஒருபுறமிருக்க – அந்த நோயாளி எண்ணுகிறான் — இவ்வளவு கற்றறிந்த வல்லுநரே இறைவனை நம்பு என்று கூறும் போது நான் ஏன் அவனை நம்பி, அவனால் உயிர் பிழைக்கப் போகும் நான்’ அவனுக்குரிய சடங்குகளைச் செய்யக் கூடாது என எண்ணுகிறான். இறைவனும் இறைவனுக்கான சடங்குகளுமே, பார்ப்பான் தமிழரை அடிமையாக்கும் கருவிகளாகின்றன.

எனவே ஆரிய அடிமைத்தளையினின்றும் விடுபட இறைவன் ஒழிப்புப்போராட்டம் நடைபெறும் இக்கால் இதுபோலும் கருத்துகளை அறிஞர்கள் வெளியிடாமலிருப்பது நல்லது. அதுவும் தமிழுக்காக, தமிழருக்காகப் பாடுபடும் தென்மொழியில் இது போன்ற கருத்துகள் இடம் பெறாமல் இருப்பது மிக மிக இன்றியமையாததாகத் தோன்றுகிறது.

தஞ்சை பகுத்தறிவாளன், தஞ்சை-1

சென்றஇதழில் வெளிவந்த ‘கூட்டல்’ கட்டுரைக்கான பிழை திருத்தம்

பக்க எண்	வரி	உள்ளவாறு	சரியானவாறு
25	கீழிருந்து 5	இரண்டும்	இரண்டு
26	மேலிருந்து 7	என்னும்	என்றும்
,,	,, 8	எண்ணருவின்	எண்ணுருவின்
29	கீழிருந்து 8	(எருரு) எண்ணின்	இவ்(வொன்றிட] [எண்ணின்
31	மேலிருந்து 7	11–விதி	11–நெறி
31	,, 15	இலிந்து	இலிருந்து
32	கீழிருந்து 3	313·53	313·54

சிறுகதை

மகனே, நான் திருந்திவிட்டேன்!

ஆங்கிலம்: தமிழ்:

அரோல்டு மக்லிங் மு. ஆறுமுகம் க.இ.ச.இ., வழக்குரைஞர்.

அன்பு எழில்,

நீ அளித்த நான்கு நாட்கள் கெடு இன்றுடன் முடிகின்றது. அலுவலக வேலை நிமித்தம் இவ்வூர் வந்த இந் நான்கு நாட்களில் உனக்கு வரைந்த மடல்கள் பல. கிழித் தெறிந்த முறைகள் பல. புகைக்கும் இன்பம் இழக்க வேண்டு மென்ற சினத்தால் உனக்கு வரைந்த பல மடல்களைக் கிழித்தெறிந்தேன். ஆனல் நீ விடுத்த வேண்டுகோள் என் முன் வந்து நிற்கையில் உன் வழிக்கு வருவது தவிர வேறு எதுவும் செய்ய என்னல் இயல வில்லை. எவ்வகையிலேனும் உனக்கு ஆறுதல் கூறி விட்டு உன் வேண்டுகோளைப் புறக்கணித்து விட்டு என்ஞான்றும் புகைக்குமின்பம் பெறலாம் எனப் பல முறை முயன்றேன். உன் உறுதியின் முன்பு அவையாவும் பயனற்றவை என்று உணர்ந்து இன்று ஒரு முடிவெடுத்தேன்.

அன்றொரு நாள் வானொலியில் புகைப்பதினல் புற்று நோய் வருவதால் புகைப்பதைக் கைவிட வேண்டுகோள் விடுத்தமை கேட்டு, "புகைப்பதினல் தங்களுக்கு நலன் ஏற்படுமா?" என நீ என்னிடம் உசாவினய். "இல்லை" என நான் விடையிறுக்க, உடனே நீ "அப்படியாயின் தாங்கள் ஏன் புகைக்க வேண்டும்?" என எளிதாய்க் கேட்டாய். "ஒரு பழக்கம்தான்" என்பதைத் தவிர வேறு எதையும் என்னல் கூற இயல வில்லை.

மறு நாள் ஒரு திங்களிதழில் புற்று நோய் பற்றிய கட்டுரையைப் படித்துவிட்டுப் புகைப்பதை அருள் கூர்ந்து கைவிடும்படி என்னிடம் வேண்டினய். ஆனல், நான் உன் பேச்சையே வேறு வழியில் திருப்பி அந்நேரத்திற்கு மட்டும் உன் எண்ணத்தை மறக்கடித்தேன். உன் உறுதிப் பண்பு உன்னை விட்டு எங்குச் செல்லும்? நீ அதை மறக்க வில்லை.

மறு நாள் இரவு நாம் உணவுட்கொள்ளுங்கால் நீ மறுபடியும் என்னிடம் புகைப்பதை விடும்படி வேண்டினய். உன் ஆசிரியர்கள் கூறியதையும் அறிஞர்கள் இதழ்களில் எழுதியதைப் படித்ததையும் என்னிடம் எடுத்துரைத்து மறுபடியும் வேண்டினய். "சாப்பிடு எழில்! இது பற்றி நாம் பிறகு பேசலாம்" என்றுதான் என்னல் இயம்ப முடிந்ததன்றி, "இல்லை எழில்! இனி நான் புகைக்க வில்லை" என்று உறுதி கூற இயல வில்லை.

திடீரென்று உணவுண்பதை விடுத்து எழுந்து நின்றய். உன் சின்னஞ் சிறிய மலர் முகத்தில் தெளிவான உறுதியான எண்ணம் எனக்குத் தெரிந்தது,

"தந்தையே! தாங்கள் புகைப்பதைக் கை விட வில்லை யெனில் நான் புகைக்கத் தொடங்குவேன். தாங்கள் புகைப்பதைக் கைவிடுவது ஒன்றுதான் என்னைப் புகைக்கத் தொடங்குவதை நிறுத்த முடியும். இஃது உறுதி. அலுவலக வேலை நிமித்தம் நாளை வெளியூர் சென்று தாங்கள் நான்கு நாட்கள் சென்று இவ்விடம் வரும்பொழுது உங்கள் முடிவைக் கூறுங்கள்," என்று உறுதியுடன் கூறி விட்டு உறங்கச் சென்று விட்டாய்.

எழில்! கடந்த மூன்று நாட்களாக அலுவலக வேலையில் கூட மனத்தைச் செலுத்தாமல் நீ கூறியதையே எண்ணிக் கொண்டிருந்தேன். உன் உறுதி எனக்குத் தெரியும். நான் புகைப்பதைக் கைவிட வில்லை யெனில் நீ உறுதியாகப் புகைக்கத் தொடங்கி விடுவாய்.

எழில்! எழில்! என்னால் புகைப்பதைக் கைவிட இயலுமா? அவ் வாற்றல் எனக்குண்டோ? இத்தனை ஆண்டுகளாக அதனால் அடைந்த இன்பத்தை இழக்க என் மனம் ஒப்புமா? இதை எவ்வாறு கற்றேன்? ஏன் அதை இழக்க என் மனம் ஒப்பவில்லை? இவற்றை என்னையே நான் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேன்.

எழில்! மற்றவர்களைப் போன்றே நான் சிறு அகவையில் பெரியவர்கள் புகைப்பதைக் கண்டு நானும் புகைக்கத் தொடங்கினேன். புகைப்பது எனக்குப் பொய்யான ஒரு பெருமையைக் கொடுத்தது. அத்துடன் மது அளிக்கும் மயக்கத்தையும் இன்பத்தையும் அஃது எனக்கு அளித்தது.

நான் தொடர்ந்து புகைத்தேன். உன் அன்னையை மணந்த பின்னும் புகைத்தேன். முதலில் உன் அன்னை அறியாதவாறு புகைத்தேன். நாளடைவில் அவள் முன்னிலையிலேயே புகைத்தேன். இதைக் கண்ணுற்ற உன் அன்னை துடித்தாள். என்னிடம் கெஞ்சினாள், மன்றாடினாள், அதை விட்டு விடும்படி! ஆனால் நான் அவளுக்குப் பொய்க் கரணியங்களைப் புகட்டி அவளை ஏமாற்றி விட்டுத் தொடர்ந்து புகைத்தேன். ஏனோ அதை மட்டும் என்னால் நிறுத்த இயலவில்லை.

திரைப்படக் கூடத்திற்குச் சென்றால் தொடர்ந்தாற்போல் இரு நாழிகையேனும் என்னால் தாங்க இயலாது. உன் அன்னையின் பெருமூச்சையும் அவளையும் புறக்கணித்துவிட்டு கொட்டகைக்குள்ளே உள்ள கடைக்கு ஓடிப் புகைத்த பின்தான் மன அமைதி பெறுவேன். விருந்துகளின் போதும், விருந்தினருடன் உரையாடும் போதும், அலுவலகத்தில் ஆழ்ந்த வேலையி லீடுபட்டிருக்கும் போதும், ஊர்திக்காகக் காத்திருக்கும்போதும் நான் ஒன்றன்பின் ஒன்றாகப் புகைத்துக் கொண்டேயிருப்பேன்.

எழில்! புகைக்க வேண்டு மென்ற எண்ணமின்றியும் புகைக்கிறோம் என்ற உணர்வின்றியும் கூடச் சில போழ்து புகைக்கின்றேன். துயில் செல்லும் இறுதி வேலையிலும் புகையை உள் இழுத்து விட்டுத் தான் உறங்குகின்றேன். காலை எழுந்ததும் நான் செய்யும் முதல் வேலை புகைப்பதுதான். சிற்றுண்டி வரத் தாழ்வாயினும் உண்ணாமல் வெறும் வயிற்றோடு புகைத்தால் வயிறு தீப் போன்று எரியும் என்று அறிந்தும் புகைக்கிறேன். முதற் புகைச்சுருள் வயிற்றை எரிப்பது

போல் தோன்றினும் இரண்டாவது அதைச் சரிப்படுத்தி விடும் என்று எண்ணிக்கொண்டு அடுத்தடுத்துப் பற்ற வைக்கிறேன்.

எழில்! விளம்பரங்களைக் கண்டு நான் என்னையே ஏமாற்றிக் கொண்டேன். ஒவ்வொரு முறையும் தங்கள் குழுமத்தின் வெண் சுருட்டு தீங்கற்றது என அறிவிக்கும் புதுப்புது விளம்பரத்தைக் கண்டு, அதில் கூறப் பெற்றிருக்கும் புகைச் சுருளுக்கு மாற்றிக் கொண்டும், இன்னும் இதை விடத் தீங்கற்றது வராதா என்று ஏங்கி ஏங்கியும் நாட்களைக் கழித்திருக்கின்றேன்,

நன்றாக அறிவு வளர்ச்சியுற்று, புகைப்பது தீங்கு, புற்று நோய் வரும் என அறிந்தும் என்னால் கைவிட இயலவில்லை. இவ்வகையில் நான் ஒரு குழந்தையேதான். எத்தனையோ அறிஞரின் அறிவுரைக்குப் பின்னும் இப்பழக்கத்தை என்னால் கைவிட முடியவில்லை. உன் அன்பான அன்னையரின் கண்ணீர் கூட என்னைத் திருத்த இயலவில்லை,

ஆனால், எழில் உன் உருவில் இறைவனையே யான் காண்கின்றேன். பத்து ஆண்டு கூட நிரம்பப்பெறாத சிறுவன் 'தாங்கள் கைவிடவில்லையெனில் நான் புகைக்கத் தொடங்குவேன்' என்று உறுதியாகக் கூறுவதைக் கேட்டும் எத் தந்தைதான் தன் மகனின் உடல் நலம் கெட விழைவான். வேண்டாம் எழில்! நீ புகைக்கத் தொடங்காதே! நான் இன்றோடு புகைப்பதைக் கை விட்டு விடுகிறேன். ஆனால் நீ மட்டும் அருள் கூர்ந்து புகைக்கத் தொடங்கிவிடாதே. வாய் வழி தொண்டை வழி, மூச்சுக் குழல் வழிச் சென்ற நஞ்சு உன் பிஞ்சு உடலில் செல்வதை நான் பொறுக்க மாட்டேன். கெடுதியான புகையை உள் இழுத்து நான் அடையும் இன்பம் எனக்கு இனி வேண்டா. நான் இன்றோடு நிறுத்தி விடுகிறேன். உன் அன்பு அன்னையிடம் இதைக் கூறு. அவள் மிகவும் மகிழ்வுறுவாள். பல நாட்கள் அவள் வடித்த கண்ணீருக்குப் பலன் ஏற்படுவதை எண்ணி அகமகிழ்வாள்.

ஓர் உதவி எழில்! என் போன்று எத்தனையோ தந்தையர் இதனுடைய தீங்கை அறிந்திருந்தும் பழக்கத்தின் அடிமையாகி மீளவும் வழியின்றி அல்லலுற்றுக் கொண்டிருக்கின்றனர். அவர்களை அவர்களின் மகன்களின் மூலமாகவே நீ கடைப் பிடித்த வழியினாலேயே திருத்துவதற்கு முயற்சி செய்! உறுதியாகத் தாங்கள் பெற்ற செல்வங்களின் நலன் கருதி அக்கொடிய பழக்கத்தைக் கை விடுவர். 'நீங்கள் புகைப்பதைக் கைவிடவில்லையெனில் நான் புகைக்கத் தொடங்குவேன்'' என்ற உன் போன்ற செல்வங்களின் ஒலி இல்லந் தொறும் கேட்கட்டும். அதைக் கேட்டு அனைவரும் திருந்தட்டும். அதைக் கண்டு தமிழன்னை உன் போன்ற செல்வங்களையெல்லாம் வாழ்த்தட்டும். நாளை உன்னை இம் மகிழ்வான செய்தியுடன் வந்து பார்க்கின்றேன். உன் அன்னைக்கு என் அன்பு. உனக்குந்தான்.

உன் அன்புத் தந்தை,

மாலிறையன்.

டெனவும் தாங்கள் கருதுவதாகத் தெரிகின்றது. அதற்காகத் தாங்கள் தொடக்கத்தில் இறையிலி என்று கூறிவிட என்ஞல் முடியாது. என்ருலும் தமிழக விடுதலைக்கு அன்று முதலிடம் கொடுத்து வந்தீர்கள். அதன் பின்னர் விடுதலைக் கருத்துகள் குறைந்து கொண்டே வந்து ஓரிறைப் பேராற்றலில் முடிந்துள்ளது. திருவையாற்றில் தாங்கள் கூறியதும் யான் மேலே கூறியுள்ளதையே நிலை நிறுத்தும்.'ஓரிறைப் பேராற்றல் இல்லாத பொதுவுடைமைக் கொள்கை நமக்குத் தேவை இல்லை தம்பி!"—இப்படித் தாங்கள் கூறியதும் யான் "மக்களை விட ஓரிறைப் பேராற்றலைத் தானே பெரிதும் வாழ வைக்க விரும்புகின்றீர்கள்?" எனக் கேட்டேன். அதற்குத் தாங்கள் விடை சொல்லவில்லை. இத் தென்மொழி விடை சொல்லி விட்டது; மக்கள் நலனினும் ஓரிறைப் பேராற்றலையே தாங்கள் பெரிதும் நாடுவதாக. எனவே மக்கட்குப் பயன்படாத கருத்துகளில் கவனத்தைப் பதிக்க விரும்பாத யான் இனி தென்மொழியைப் படிப்பதில்லை எனும் முடிவிற்கு வந்துள்ளேன். ஆண்டுக்கட்டணத்தில் எச்சம் இருப்பின் நன்கொடையாக இருக்கட்டும். இனி ஆண்டுதோறும் தென்மொழிக்காகும் கட்டணத்தைத் தனித்தமிழ் நலங்கருதி நன்கொடையாகவே என்னுயிருள்ளவரை அனுப்புவேன். ஆஞல் தாங்கள் தென்மொழி அனுப்பவே வேண்டா. —சி. அறிவுறுவோன், அம்மையகரம்,

0: 294: தாங்கள் உணர்த்தவந்த கருத்துப்படி, அன்பர்தம் புகழுரையாலோ இகழுரையாலோ, தங்கள் உள்ளம் மகிழ்வோ, சோர்வோ அடையாமை உண்மையாயின், 'இப்படி' விளக்கம் தரவும் தேவையில்லை. அப்படிப்பட்ட மடல்களை வெளியிட்டுப் பக்கங்களை வீணடிக்கவும் தேவையில்லை. பாவை-எழிலேந்தி, புதுவை.

0: 295, 'பார்ப்பானையே குறை கூறிப் பயனில்லை' என்ற தென்மொழி ஆசிரியவுரை உண்மையானது; நடுநிலையானது. எளியேன் என்ருே இம்முடிவினன் ஆனேன். என்ருலும் இக்கருத்தைத் தங்கள் மூலம் தெரிகின்றபோது, என் தெளிவு எத்துணை மெய்யானதென்று எண்ணி எக்களிக்கின்றேன். தங்களுடைய 'இறைமைப்' படைப்புகள் இனியன. தங்களைத் தெளியாத் தமிழ் நெஞ்சங்கள் தவருன தம் மயக்கைத் தங்கள் மேலேற்றி எழுதி வருகின்றனர்..... என் செய்வது? ஒவ்வொரு மாந்தனுக்கும் ஒவ்வொரு வகை உள்ளம் என்பதை உணர்கின்றேன். ஒருவர் பாராட்டுவதை மற்ருெருவர் வெறுக்கின்ருர்! மற்றவர் வெறுப்பதை வேருெருவர் பாராட்டுகின்ருர்! இந்த 'இருமை வகை தெரிந்த பெருமை'க்குரிய உங்களை, எல்லாம் வல்ல இறைப்பேராற்றல் முற்றும் வளர்த்து எங்கட்கெல்லாம் முழுமைத் துணையாகவும்–தமிழுலகச் சிறப்புக்கொரு தலைமையாகவும் தந்தருளுமாக.

—காரை-இறையடியான், காரைக்கால்.

0. 296' தங்கள் ஆசிரியவுரைக் கட்டுரையைத் தென்மொழியின் தொடக்க காலத்திலேயே எழுதியிருக்க வேண்டும். என்ருலும் அது தன் பணியைச் செய்யும் என்றே நம்புகின்றேன்.

—கம்—அ. ஒளியவன், கரூர்.

(அடுத்த பக்கம் பார்க்க)